சிவநேசன்

சுடர் 8 ஒளி 5

Dec 1934

SL
ஓ211,N27 SN
N34.8.5
186946

1428

1428

REGD. No. M. 2302.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR OF
20 DEC 1934
MADRAS

# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு அ. § பலவான்குடி—பவ—மார்கழி § திங்கள் ரு.


| எண் | உள்ளுறை. | | பக்கம். |
|---|---|---|---|
| க. | உற்றதுணை | ... | 101 |
| உ. | மதிப்புரை மஞ்சரி | ... | 103 |
| ங. | சிவபாரம்யம் | ... | 105 |
| ச. | சப்தவிடங்கத்தலங்கள் | ... | 110 |
| ரு. | ஐயனிறே? | ... | 111 |
| சு. | கேதாரவிரதம் | .... | ,, |
| எ. | சிவபூசை | ... | 112 |
| அ. | பிள்ளையார்நோன்புநிர்ணயம் | ... | 114 |
| கூ. | கண்முன்காட்டென்பார்க்குவிடை | ... | 115 |
| க0. | திருக்கார்த்திகைத்தீபம் | ... | 116 |
| கக. | அறநெறி | ... | ,, |
| கஉ. | ஒரு பெரியார்பிரிவு | ... | 117 |
| கங. | பக்தி | ... | 119 |
| கச. | பழமலைக்கோவை முகவுரை | (1—12) | |
| கரு. | தேவிகாலோத்தர ஆகமம் | (33—40) | |


ஆசிரியர் ராம. து. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

14
RE

# செய்தித்திரட்டு.

உள்ளூர்:—நகரச்சிவாலயத்தில் கார்த்திகை மாதச் சோமவாரங்களிலும், ௨௨ திருக்கார்த்திகையிலும் ௨௯ விநாயகசஷ்டியிலும் திருமஞ்சன திருவாராதனையாதிய சிறப்புகள் செய்யப்பெற்றன.

குமாரவிநாயகர் திருக்கோயிலில் கார்த்திகை ௨௯ தொடங்கி திருவெம்பாவைத் திருநாள் நடைபெறுகிறது. மார்கழி ௯ காலை ஷ திருக்கோயிலிலும் நகரச்சிவாலயத்திலும் நடராஜர் அபிடேகமும், தெரிசனமும் திருவுலாவும் நடைபெறும்.

குன்றக்குடி:—கார்த்திகை சோமவாரங்களுக்கும் திருக்கார்த்திகை தீபத்திற்கும் திரளான அன்பர்கள் வந்து தரிசித்து இன்புற்றார்கள். இம்மதி ௨௯ தொடங்கி தைமீ ௨௨ தேர்த்திருவிழாவும் ௯ பூசத்தீர்த்தவாரியும், பழனியாபி ஊருணி மண்டயப்படியும் நடைபெறும்.

வைரவன் கோயில்:—நகரத்தார்களின் ஒன்பது கோயில்களுள் ஒன்றாக விளங்கும் இத்திருக்கோயிலில் கார்த்திகை ௨௨ சம்பா சஷ்டி உத்ஸவம் தொடங்கி ௨௯ அசுரசம்மாரமும் ௨௮ தீர்த்தவாரியும் வழக்கம்போல சிறப்பாக நடைபெற்றன.

திருடன் பிடிபட்டான்:-பில்லமங்கலமிருந்து ஆத்தன்குடிக்குவந்த வாடகைவண்டிக்காரன் வண்டிமாடுகளைப்பூட்டுடன்தெருவில் நிறுத்திவைத்து சிற்றுண்டிக்கடைக்குள் சென்று சிற்றுண்டிகொண்டு திரும்பிவந்து வண்டிமாடுகளைக் காணமல் அலைந்து தேடி அவ்வூரில் இரண்டு மனிதர்களையும் பலவான்குடிக்குவந்து மேலும் இரண்டுமனிதர்களையும் துணைக்கொண்டு வாடகைக்கு விசைவண்டி பிடித்து ஏறிச்சென்று அவர்கள் தேவகோட்டை ரோட்டில் முஞ்னிக்குண்டுக்குச் சமீபத்தில் வண்டிமாடுகளுடன் திருடனைக்கண்டு பிடித்தனராம். பிடிபட்ட திருடன் சாதியில் கம்மியன் வயது 20, பேர் இராமசாமி, ஊர் மணச்செய் என்று தெரிகிறதாம்

காசியாத்திரை:—மிகுந்த திருவாளர் நாகசுந்தரமய்யர், என்ற பால் சுவாமியவர்கள், காசியாத்திரைசென்று கார்த்திகை ௧௯ திருப்பிரஸாதம் அனுப்பித் திருக்கிறார்கள்.

சிதம்பரம்:—ஸ்ரீசிவகாமி சுந்தரி சமேத நடராஜமூர்த்திக்கு கார்த்திகை ௨௮ கொடியேறி, திருவிழா நடைபெறுகிறது. இம்மதி ௬. தேர்த்திருவிழாவும் ௯ சூரிய உதயத்திற்கு முன் மகாபிஷேகமும், ௧௧ மணிக்குள் திருவாபரண அலங்காரக்காக்ஷியும் சோடசவுபசாராதிமகாபூசையும் 12 மணிக்கு ஆருத்ரா மகாதரிசனமும், ஞானாகாச சிற்சபாப்பிரவேசமும் ௮௨ புஷ்பப்பல்லக்குக் காக்ஷியும் நடைபெறும்.

திருவத்திபுரம்:—ஸ்ரீபாதுகவி மாணவர்கழக ஆறாவது ஆண்டுவிழா ஐப்பசி௧௧, ௧௨,௧௩களில் திருவோத்தூர், பரிதிபுரத்திருநாவுக்கரசுமடாலயத்தில் சென்னை, கடலகம் திருவாளர், கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றது. அவ்விருநாட்களிலும் தமிழ்ப் புலவர் பலர் அரிய சொற்பொழி வாற்றினர்.

இக்கழகம் பிற துறைகளிலும் வளர்ச்சி யடைவதோடு, இதன்சாபில் ஓர் தமிழ்க்கல்லூரியையும் இயலச்செய்து வருவது தமிழ் மக்கட்கு தமிழ்மொழிக்கும் பெருநன்மை பயப்பதாகும், கல்லூரியையும் கழகத்தையும் தமிழ்மக்கள் ஆதரிக்குமாறு கழகக் காரியதரிசிகள், பெரிதும் வேண்டுகிறார்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 DEC 1934
MADRAS

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

| | | |
|---|---|---|
| ஆண்டு ௮ | பவ-மார்கழி: 1934-டிசம்பர் | திங்கள் ௫. |

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## உற்றதுணை.

உற்றதுணை, என்ற சொற்றொடரிலிருந்து யாருக்கு உற்றதுணை; என்ற வினாவும், உயிர்க்கு உற்றதுணை என்றவிடையும் பிறக்கும். உயிர் அணுத் தன்மையுள்ளது; ஆகலின் சிற்றுயிர் என்னும் பேர்பெற்றது. உயிர், சீவன், பிராணன் என்பன ஒரு பொருட்சொற்களே. உயிர், ஆன்மா, பசு என்பனவும் ஒருபொருட்சொற்களென்பாரும், உயிர்வேறு ஆன்மாவேறு ஆன்மாவும் பசுவுமே ஒருபொருருட் சொற்களென்பாரும் உளர். முன்னையோர் உயிர், ஆன்மா எனவும் உயிர்க்குயிரா யிருப்பவர் ஆன்ம நாயகராகிய கடவுள் எனவும் ஆதலாற்றான் உயிர்க்குயிராயுள்ளவரென்பது ஒப்பற்றகடவுளைக்குறிக்கின்றதெனவுங்கூறுவர். பின்னையோர்உயிர் ஒரு பிராணவாயுவேயன்றி ஆன்மாவன்று; உடலழியும்போது உயிரும் அழியுந்தன்மையுடையது; ஆன்மா அழிவில்லாதது; 'என்றுநீ அன்று நான்' என்றபடி அநாதியாயுள்ளது. என்னுயிர், என் பிராணன், என்னுடையசீவன் என்று கூறிக்கொள்ளுமிடத்து என் என்பது ஆன்மாவாகியதன்னை முன்னிலைப் படுத்துகின்றதென்றும் உயிர் ஆன்மாவுக்கு வேறாயுள்ளது என்றும். "என் உடலுயிராதியெல்லாம்" என, வடலூராரும் பிறரும் கூறுதல் கொண்டு

186986

தெளியலாம் எனவும் கூறுவர். உயிரும் ஆன்மாவும் ஒருபொருளா? இருபொருளா? என்னும் முடிவை நுண்ணறிவுடைய நூலொடுபழகிய உண்மை ஞானிகளே யுணர்த்தவல்லார்; தத்துவ வுணர்ச்சி செய்யாததமியேன்பெரிய அத்துறையிற் புகுந்திடர்ப்படாது அறிவான்மிக்கோரால் அறிந்தறியும் அவ்வளவில் வைத்துக்கொண்டு உற்றதுணையைப் பற்றிச் சிறிதாராய்கின்றேன். உடலுடன்கூடி வாழும் உயிர்வர்க்கத்தில்அருமையாகிய மக்கட்பிறவியைப்பெற்றவர்களுள், பெரும்பாலார்தங்கட்குஉற்றதுணைபெண்டீர், மக்கள், கிளைஞர்களே என்பர். உண்மையில் அவர்கள் உற்றதுணையாவார்களா? என்று சிந்தித்தால் ஆகார்களென்பதேதெளிவாகும். உலகானுபவத்தால் உணரப்பாலதாகலின் ஹேதுக்கள் கூறித்தான்விளக்கவேண்டுமென்பதல்ல. இடம் பொருள் ஏவலும் அற்றவிடத்து உற்றதுணையாகா. உற்றதுணைதான் எது என்னின்? நன்றுய்ந்துகொள்ளற்குரிய பகுத்தறிவு கொண்டுதான் தெளியவேண்டும். பகுத்தறிவு ஒவ்வொருவருக்கும் இருப்பினும் பகுத்தறியுந்திறம்பெறல் வேண்டும். பகுத்தறியுந்திறம் பெறுதற்கு ஆதாரம் கல்வி என்பதே போதரும்.

கல்விகற்றுத் தேர்ச்சியுற்றவரே கவலையற்றவராக ஞானத்திடமுற்றவராக வீறிவிளங்குவர். கல்வியே மக்கடங்கண்ணாகும். கல்வியே செல்வமாதிய பல்வேறு பொருள்களையும் நல்குதற்குரியதாகும். அதுபற்றியே 'கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க்குற்றதுணை' என குமரகுருபர அடிகள் கூறிப்போந்தனர்.

> 'ஊருஞ்சதமல்ல உற்றார்சதமல்ல உற்றுப் பெற்ற
> பேருஞ்சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளும்
> சீருஞ்சதமல்ல செல்வம் சதமல்ல இத்தேசத்திலே
> யாருஞ்சதமல்ல நின்றாள் சதங்கச்சி ஏகம்பனே' எனவும்,

'உற்றவரும் உறுதுணையும் நீயே' எனவும், 'உற்றாரையான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்' எனவும், 'உடையானே உனையல்லால் உறுதுணைமற்றறியேனே' எனவும், எழுந்த திருவாக்குக்களின் உறுதியையுணரவும் கல்வியை உற்றதுணை எனக் கடைப்பிடிக்கவேண்டும். கல்வியைக் கசடறக்கற்று அறியாமையையொழித்து அறிவை விளக்கவேண்டும். கற்றதனாலாயபயன் கடவுளைத்தொழுதலே. உடலுறை கடவுளையன்றி உற்றதுணையாரும் இலர். [illegible]ர், பெருநாட்டார், பேருகில், உற்றார்,



உகந்தார் ஆயினும், பேராசர்களே யாயினும் உற்றதுணையாய்க் கொள்ளலாமா? யார்க்கேனும் உற்றதுணையாயினரா? ஆவரா? என்றெல்லாம் வினவிவிசாரித்திடில் ஒன்றும் இன்றென்பதே பெறப்படும். அங்ஙனம் உண்மைபெறப்படவே பாசபந்தங்களிற் கட்டுண்டுழலும் ஆன்மா, அப்பந்தங்களினின்று விலகிப் பதியை யணுக விரும்பும்; பசுபதியாம் ஆன்மநாயகனே உற்றதுணையென்பதைத் தெற்றெனத்தெளிந்து உற்றதுணைவனைக்கூடும் வகையை நாடி அவனருள்வரப்பெற்று அவனைக்கூடி, அனவரதமும் நிரதிசயானந்தயின்பத்தை நுகர்ந்து இனிதுய்யும். ஆகலின், பேரறிவைப் பெருக்கி, உறுதுணைவராகிய பேரிறைவருடன் கூடி இன்பநுகர்ச்சி பெறுதற்கும், கல்வியேஉற்றதுணையாம் என்பது தெளியற்பாலது.

---

## மதிப்புரை மஞ்சரி.

விநாயகபரத்துவம்:—பிரணவப்பொருளாம்பெருந்தகை ஐங்கரப் பெருமானார் திருவுருக்கொண்டருளிய மூர்த்தங்கள் பலவற்றுள் முப்பத்தொரு திருமூர்த்தங்களின் வரலாறுகளை விளக்கி விநாயக பரத்துவம் விரவியுள்ள பிரமாணங்களை ஆகமங்களிலிருந்தும் தேவாராதி திருமுறைகளிலிருந்தும், விநாயகபுராணம் கந்தபுராணம் ஆதிய பல புராணங்களிலிருந்தும், பலபிரபந்தங்களிலிருந்தும் சிவதருமோத்தரம் திருப்புகழ் ஆதியவைகளிலிருந்தும் எடுத்துக்காட்டி தெள்ளிய தமிழ்நடையில்எழுதப்பெற்றுள்ளசிறந்த நூல். இதனைஉள்ளமுவந்து படிப்பவர்கள் பரத்துவஉண்மையை உள்ளவாறுணர்ந்து மெய்ப் பக்தியுடையராய் மேலாம் விநாயகரது திருவருளைப்பெற்று மேன்மையுறுவர். இதனை ஆக்கியோர் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்களவர்கள். இதன் விலை சதம் 40, வேண்டுவோர் அவர்கட்கு எழுதிப்பெறலாம்.

ஆலயஅமைப்பு:—இது சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களவர்களின் பிரசங்கமாகும். இதனுள் தேவாலய மடாலய வித்தியாலயங்களின் அமைப்பும், பாகுபாடுகளும், கடவுளின் குணாதிசயங்கள் அவரைவழிபடுமுறை, வழிபடுவதாற்பயன், மூர்த்திகளின் தத்துவார்த்தங்கள், வழிபாடு செய்வோர் கையாளும் முறை, விதிவிலக்குகள், தீக்கைக்கிரமங்கள் ஆதிய பலவும் விளக்கப்பெற்றுள்ளன.

திருக்குறள்நாட்குறிப்பு:—1935 வருடத்திற்கு திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வெளியீடு. புத்தகக்கடைகளிலெல்லாம் கிடைக்கும். சாதாரணப்பதிப்பு அணா 5. உயர்ந்த பதிப்பு பென்சல் ரப்பர் நாடாவுடன் அணா 6. இதன்கண் வட்டி அட்டவணை, சம்பள அட்டவணை, பஞ்சாங்கம் ஆகியவைகளும் தினப்பக்கம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருகுறளாக 365 திருக்குறள்களும் அடங்கியிருக்கின்றன. அழகும் பயனும் சிறந்துள்ள இதனையாவரும் வாங்கிப்பயன் பெறலாம்.

மனோன்மணீயம்:—இதன் பெயருக்கேற்ப செந்தமிழ்த் தேன்பிலிற்றும் செய்யுட்களால் ராய்பஹதூர் P. சுந்தரம்பிள்ளை எம். ஏ. அவர்கள் இயற்றியநூல் தமிழ்நாடெங்கணும் பரவித்தன் புகழைநிறுவியுளது. அந் நூலாசிரியரின் திருமகனான பி. எஸ். நடராஜ பிள்ளையவர்கள்பால் உரிமைபெற்று அதனை, வசனநடையில் நாடக முறைக்கேற்றவாறு சென்னை, பச்சையப்பன் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் திரு, ம. சண்முகசுந்தரமுதலியார் எம். ஏ. எல். டி. அவர்களால் இயற்றியது. நல்ல காலிகோ கெட்டிக்கட்டிடம் விலை ரூ. 2–4–0 கிடைக்குமிடங்கள்.

1. கலாவல்லி பதிப்பகம், கனகவிலாஸ், டிசில்வா ரோட் தொடர்ச்சி மயிலாப்பூர்.

2. ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ. எல். டி. சுந்தர நிலையம் பச்சையப்பா ஹாஸ்டல் ரோட்டு சேத்துப்பட்டு, சென்னை.

3. ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம், 53–56– பவழக்காரத்தெரு சென்னை.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்:—இது சென்னை, மயிலாப்பூரிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடத்திலிருந்து வெளிவரும் தமிழ்மாத மலர் பதினொன்காண்டுகளாக நடைபெறுகின்றது. வேதாந்தத்தின் தத்துவார்த்தங்களை விளக்குவது. பலபேரறிஞர்களின் கட்டுரைகளைக் கொண்டது ஆண்டுவரி-உள்நாடு ரூ. 2–0–0. வெளிநாடு ரூ. 3–0–0 பத்திராசிரியர்கள் சுவாமிகூட ஸ்தாநந்தரும் அ. ஸ்ரீநிவாசாச்சாரியார் பி. ஏ. எல். டி. யும் ஆவர். இவ்வெளியீடு நம் சிவநேசனுக்கும் உதவி வருகின்றார்கள்.

[மேற்கண்ட நூல்களின் பிரதிகளை எமதுபார்வைக்கு உதவிய நூலாசிரியர்களைப்பற்றி நன்றிபாராட்டுதும்.]

உ

# சிவபாரம்யம்.

## (ஸ்ரீவியாஸர் செய்த பிரசங்கம்)

(ஸ்ரீ உ. வே. T. V. ஸ்ரீநிவாஸாசார்யரவர்கள் மொழிபெயர்த்த துரோணபர்வம் சென்னை: கணேச அச்சுக்கூடம் 1922 ம் வருஷப்பதிப்பு 203 வது அத்தியாயத்திரட்டு.)

தனஞ்சயன் தனக்கு ஜயத்தை உண்டுபண்ணக்கூடிய மிக்கபெரிதான ஓர் ஆச்சரியத்தைக் கண்டு தற்செயலாக அங்கு வந்திருக்கின்ற வியாசரைப் பார்த்து வினவலானான். 'மகரிஷியே! யான் யுத்தத்தில் மாசற்ற அம்புக் கூட்டங்களால் பகைவர்களைக் கொன்றேன். முன்னிலையில் சென்றுகொண்டிருக்கின்றவரும் அக்னிபோலப் பிரகாசிக்கின்றவருமான ஒரு புருஷரை நான் காண்கிறேன். மஹாமுனிவரே! ஜ்வலிக்கின்ற சூலத்தைக் கையிலேந்தி எந்தத் திக்கை நோக்கிச்செல்கிறாரோ அந்தத்திசையில் என்னுடைய சத்துருக்கள் பிளக்கப்படுகிறார்கள். அவரால் நாசம் செய்யப்பட்ட எல்லாவீரர்களையும் என்னால் கொல்லப்பட்டவர்களாக ஜனங்கள் எண்ணுகிறார்கள். அந்தப்புருஷரால் நாசம் செய்யப்பட்ட சேனைகளை யான் பின்தொடர்ந்து செல்லுகிறேன். பகவானே! அதனை எனக்குச் சொல்லவேண்டும். அந்தப் புருஷோத்தமர் யார்? அவர் சூலத்தைக் கையிற் கொண்டவரும் தேஜஸினாலே சூரியனுக்கு ஒப்பானவருமாக என்னால் காணப்பட்டார். கால்களால் பூமியைத்தொடவில்லை; சூலத்தையும் விடவில்லை. அவருடைய தேஜஸினாலேசூலத்தினின்றும்ஆயிரம்சூலங்கள்விழுகின்றன' என்றுவினவ, வியாஸர் "பார்த்த! பிரம்மாக்களுக்குமுதன்மையானவரும் தேஜஸ்வரூபியும் புருஷரும் பிரபுவும் புவனஸ்வரூபியும் பூர்புவஸ்வரூபியும தேவரும்தேஜஸுகளுள் உத்தமரும்லோகநாதரும்ஈசானரும்வரங்கொடுப்பவருமானசங்கரனை நீ கண்டாய். மகாதேவரும் மகாத்மாவும் ஈசானரும் சடைமுடியுடையவரும் விபுவும் முக்கண்ணரும் பெரிய புஜங்களையுடையவரும் சம்ஹார கிருத்தியத்தால் உலகத்தை அலறும்படிசெய்கின்றவரும்பக்தர்களுடையபாபங்களை அபகரிக்கின்றவரும் முக்காலத்திலும் ஸ்திரமாக இருக்கின்றவரும் வரதரும் பிரதானரும் ஒருவராலும்ஜயிக்கப்படாதவரும் உலகத்தாருடைய அன்புக்கிடமானவரும் அதீஸ்வரரும் ஜகத்துக்கு வித்துப்போன்றவரும் ஜயசீலரும் மங்களத்தை யுண்டுபண்ணுகிறவரும் தாமாகவே தோன்றியவரும் சர்வஸ்வரூபரும் சர்வலோகேஸ்வரர்களுக்கும் ஈஸ்வரரும் மூவுலகங்களையும் சிருஷ்டிக்கின்றவரும் துஷ்டர்களுக்குப் பயங்கரரும் சந்திரசேகரரும் சாஸ்வதரும் எல்லாவாகீஸ்வரர்களுக்கும் ஈஸ்வரரும் சத்துருக்களால் எவ்விதத்தாலும் ஜயிக்கக் முடியாதவரும் பிறப்பு இறப்பு மூப்புக்களைத் தாண்டியவரும் ஞானஸ்வரூபியும் ஞானத்தினால் அடையத்தக்கவரும் எவ்விதத்தாலும் ஒருவராலும் அறியமுடியாதவரும் பக்தர்களுக்கு அருளோடு கூடியவரங்களைக் கொடுக்கின்றவருமான பகவானை நீ சரணமடைவாயாக. அந்தப்பிரபுவினுடைய கிங்கரர்கள் திவ்யரூபமுள்ளவர்கள். பார்த்த! அப்பா! இப்படிப்பட்டவர்களால் பூஜிக்கப்படுகின்றவரான சங்கரர் கருணையினால் உன்னெதிரில் செல்லுகிறார். துரோணபுத்திரர், கர்ணன், கிருபர் இவர்களாலே

ரக்ஷிக்கப்பட்ட அந்தக் கௌரவசேனையை மகாதேவரைத் தவிர வேறு எந்தமனிதன் மனத்தினாலாவது அவமதிப்பதற்குத் திறமை யுடையவனாவான்? அந்த மகேஸ்வரர் எதிரில் நிற்குங்கால் மூவுலகங்களிலும் அவருக்குச் சமமான பிராணியில்லை. யுத்தத்தில் கோபங்கொண்டிருக்கிற அவருடைய வாடையினாலே கூடச் சத்துருக்கள் பிரஜ்ஞை யிழந்தவர்களும் பெரும்பான்மையாக மரித்தவர்களும் நடுக்கமுற்றவர்களும் கீழே விழுகின்றவர்களும் ஆகிறார்கள். அவருக்கு வந்தனம் செய்துகொண்டு தேவர்கள் ஸ்வர்க்கத்தில் நிலைபெற்றிருக்கிறார்கள். உலகத்தில் இன்னும் எந்த மனிதர்களுண்டோ இன்னும் எந்த மனிதர்கள் ஸ்வர்க்கத்தை ஜயித்தவர்களோ எந்தப்பக்தர்கள் மங்களஸ்வரூபியும் உமாபதியும் சர்வேசருமான ருத்ரரை வேறிடத்தில் மனத்தைச் செலுத்தாமல் ஏகபாவனையோடு எப்பொழுதும் உபாசிக்கின்றார்களோ அவர்கள் யுத்தங்களில் ஜயத்தைப்பெற்று இப்பூமியை ஆளுகிறார்கள். அம்மனிதர்கள் இம்மையில் சுகத்தையடைந்து (மறுமையில்) உத்தமமான கதியை அடைகிறார்கள். கௌந்தேய! எப்பொழுதும் சாந்தஸ்வரூபியும் நீலகண்டரும் நல்லகாந்தியுள்ளவரும் ஜடாமண்டலதாரியும் பயங்கரரும் யமனுக்குப் பிரியமானவரும் ஸ்தாணுவும் ஹிருதய கமலத்தில் வசிக்கின்றவருமான ஈஸ்வரரின்பொருட்டு நமஸ்காரம்செய். பிராணிகளை அழிக்கின்றவருக்குவந்தனம். சேஜுபதியான ஈஸ்வரருக்கு வந்தனம். (ஹ்ருதய) மத்தியிலிருப்பவருக்கு வந்தனம். பக்தர்களைக் கரையேற்றுகின்றவரும் பாஸ்கரஸ்வரூபியும் தீர்த்தஸ்வரூபியும் வேதஸ்வரூபியும் ஸர்வப்பிரியரும் கைலையங்கிரியில் வசிக்கின்றவருமான பூதபதியின் பொருட்டுவந்தனம். பிருகுவுக்குப் பிரியரான தேவருக்கு வந்தனம். கௌந்தேய! வரதரும் உமாபதியும் தக்ஷனுடையயாகத்தை நாசம் செய்தவரும் பூதங்களுக்கெல்லாம் பதியும் அழிவற்றவரும் ஜடாதரரும் விருஷபத்தை வாகனமாகக் கொண்டவரும் சுகிருதங்களுக்கெல்லாம் நாதரும் விருஷபத்தைக் கொடியாகக் கொண்டவரும் புலித்தோலை ஆடையாக அணிந்தவருமான ஈஸ்வரரைச் சரணமடைவாயாக. வேதங்களால் பிரதிபாதிக்கப்பட்டவரும் பிராம்மணர்களிடத்தில் அன்புள்ளவரும் பிநாகமென்னும் வில்லைக் கையிலேந்தியவரும் எல்லோருக்கும் சரண்யருமான தேவரீரைச் சரணமடைகிறேன். தேவதைகளுக்கெல்லாம் நாதராயிருப்பவருக்கு வந்தனம். பிரதமகணங்களுக்கெல்லாம் பதியாயிருப்பவருக்கு வந்தனம். வில்லுக்கு ஆசாரியராயிருக்கின்றவரான உமக்கு வந்தனம். உத்தமருக்கு வந்தனம். அநேகவிதரூபத்தைத் தரித்தவருக்கு வந்தனம். அநேக விற்களையுடையவருக்கு வந்தனம். பகனென்னும் சூரியனுடைய கண்ணைக் கவர்ந்தவருக்கு வந்தனம். மனிதர்களுக்கெல்லாம் பதியாயிருப்பவருக்கு வந்தனம். மாத்ருதேவதைகளுக்குப் பதியாயிருப்பவருக்கு வந்தனம். கணங்களுக்கெல்லாம் பதியாயிருப்பவருக்கு வந்தனம். பசுக்களுக்கெல்லாம் பதியாயிருப்பவருக்கு வந்தனம். யஜ்ஞங்களுக்கெல்லாம் பதியாயிருப்பவருக்கு வந்தனம். பன்னிரண்டு சூரிய மூர்த்திகளுள் ஒருவனான பூஷாவினுடைய பல்லையுடைத்தவரும் முக்கண்ணருமான அந்த ஈஸ்வரருக்கு வந்தனம். மகாதேவருடைய திவ்யமான செய்கைகளை என் அறிவுக்குத்தக்கபடியும் என்சாஸ்திரஞானத்துக்குத் தக்கபடியும் உனக்கு உரைப்பேன். அந்த மகாநுபாவர் கோபிப்பாரேயாயின் பாதாளத்தை யடைந்திருந்தாலும் தேவர்களோ அசுரர்களோ கந்தர்வர்களோ ராக்ஷஸர்களோ ஒருவரும் உலகத்தில் சுகத்தையடைய



மாட்டார்கள். முற்காலத்தில் தக்ஷனுடைய யாகத்தை இந்த மகேஸ்வர் நாசம்செய்தார்; யஜ்ஞதேவதையானது பயந்து ஓட, தேவர்களனைவரும் சுகத்தை யடையவில்லை. பார்த்த! சங்கரர் அட்டகாசத்தோடு சூரியனை எதிர்த்து ஓடிப் புரோடாசத்தைப் பக்ஷிக்கிற அவனுடையபற்களை நாசம் செய்தார். அதைக்கண்டு எல்லாத்தேவதைகளும் மகேஸ்வரரை நமஸ்காரம் செய்து அவருக்கு ஸ்ரேஷ்டமான யஜ்ஞபாகத்தைக் கல்பித்தார்கள். அரசே! தேவர்கள் பயத்தால் சரணமடைந்தார்கள். தேவர்கள்தோற்று இன்னமும் அவரைப்பற்றிப் பயமுடையவர்களா யிருக்கின்றார்கள். ஆகாயத்தில் வீர்யமுடையவர்களான அசுரர்களுக்கு இரும்பு வெள்ளிதங்கமயமாகவுள்ள மிகப்பெரிய மூன்று பட்டணங்கள் இருந்தன. அந்தமூன்றுபட்டணங்களையும் இந்திரன் சர்வாயுதங்களாலும் பிளப்பதற்குச் சக்தியற்றவனானான். இந்திரனோடு எல்லாத்தேவர்களும் ருத்திரரைப் பார்த்து 'மஹேஸ்வரரே! இந்த அசுரர்கள் உலகத்தைத் துன்புறுத்துகிறார்கள். தேவதேவரே! மகாதேவரே! உம்மைத்தவிர இந்த அசுரர்களை வேறொருவன் எவ்விதத்தாலும் கொல்வதற்குத் திறமையுள்ளவனாகான். நீர் இந்தத் தேவசத்துருக்களை சம்ஹாரம்செய்யும். ருத்திரரே! புவனேச்வரரே! இந்த அசுரர்களை நாசம் செய்வீராகில் எல்லாக்கர்மாக்களிலும் பசுக்கள் ருத்ரசம்பந்தமுள்ளவைகளாகும்' என்று பிரார்த்தித்தார்கள். ஈஸ்வரர்களுக்கெல்லாம் ஈஸ்வரராக விளங்குகின்ற அந்த ஹரர் 'அவ்வாறே ஆகட்டும்' என்றுசொல்லிவிட்டு, கந்தமாதனம், விந்தியம் என்னும் பர்வதங்களை த்வஜங்களாகவும், பூமியை ரதமாகவும், ஆதிசேஷனை அச்சாகவும், சந்திர சூரியர்களைச் சக்கரங்களாகவும், ஏலாபத்ரன் புஷ்பதந்தன் என்கிற சர்ப்பங்களைக் கடைமுளைகளாகவும் மலயபர்வதத்தை நுகத்தடியாகவும், தக்ஷகனை நுகத்தடிகட்டும் கயிறாகவும், பிராணிகளைப் பூட்டாங்கயிறுகளாகவும், நான்கு வேதங்களையும்நான்குகுதிரைகளாகவும், உபவேதங்களைக் கடிவாளங்களாகவும், காயத்ரி சாவித்ரி தேவதைகளைக் கடிவாளக் கயிறுகளாகவும், ஓங்காரத்தைக் குறடாவாகவும், பிரம்மாவை சாரதியாகவும், மந்தரபர்வதத்தை வில்லாகவும், வாசுகியை நாண் கயிறாகவும், விஷ்ணுவைப் பாணமாகவும், அக்னியைப் பாணத்தின் நுனியிலுள்ள முள்ளாகவும் செய்துகொண்டும், பாணங்களின் இருபக்கத்திலுமுள்ள இரண்டு சிறகுகளிலும் வாயுவையும், அதனுடைய கணுவில் சூரிய புத்ரனையமனையும் சான்னித்யம் பண்ணும்படி செய்துகொண்டும், மின்னலை நுனிக்கூராகச்செய்துகொண்டும், மேருவைத்வசமாக அமைத்துக்கொண்டும் சர்வதேவமயமான திவ்யரதத்தின் மீதேறி த்ரிபுரத்தை நாசம் செய்வதன்பொருட்டுப் பரமேஸ்வரர் தேவர்களாலும் ரிஷிகளாலும் தபஸ்விகளாலும் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டு மாகேஸ்வரமென்னும் வ்யூகத்தை வகுத்துக்கொண்டு அசைவற்றவராகி ஆயிரம் வருஷங்கள் எதிர்த்துநின்றார். அந்தப்பட்டணங்களை அந்தப் பரமேஸ்வரர் அம்பினால் பிளந்தார். தனஞ்சய! தேவியினுடைய ஸ்வயம் வரகாலத்தில் நடந்த வேறொரு விருத்தாந்தத்தைக்கேள். ஐந்து சிகைகளுள்ளவனும் தானாகவே வந்து மடியில் உட்கார்ந்தவனுமான பாலனைப்பார்த்து உமையானவள் அவனுடைய வரலாற்றை யறிய எண்ணங்கொண்டு 'இந்தப்பாலன் யார்? என்று தேவர்களைக் கேட்டாள். [பார்வதியின் மடியில்உட்கார்ந்ததற்காக] அசூயை கொண்டவனும் கோபங்கொண்டு வஜ்ராயுதத்தால் தம்மைஅடிக்க வந்தவனுமான அந்த இந்திரனுடைய வஜ்ராயுதத்துடன் கூடின கையை

ஸ்ரீபரமேஸ்வரர்சிரித்துக்கொண்டு விரைவாகஸ்தம்பிக்கச் செய்தார். பிறகு இந்திரன் (தேவகணங்களோடு) பிரம்மதேவரிடம் சென்றான். அனைவரும் பிரம்மதேவரிடம் பின்வருமாறு கூறினார். 'பிரம்மதேவரே! பாலவடிவந் தரித்துப் பார்வதியினுடைய மடியை அடைந்திருக்கின்ற அற்புதமான ஒரு புருஷனைக்கண்டோம். அந்தத்திவ்யபுருஷன் எங்களால் அறியப்படவில்லை. எந்தப் பாலனாலே இந்திரனோடுகூடின நாங்கள் யுத்தஞ்செய்யாமலே விளையாட்டாக ஜயிக்கப்பட்டோமோ அப்படிப்பட்ட புருஷனைப்பற்றி நாங்கள் உங்களைக் கேட்கவிரும்புகிறோம்' என்றார்கள். பிரம்மதேவர் அவர்களைப் பார்த்துக் குழந்தையை அளவற்ற தேஜசுள்ள சம்புவாக எண்ணிக் கூறலானார். 'ஷாட்குண்ய பரிபூர்ணரான அந்தப் பரமசிவன் உலகத்துக்கு நாதர். அந்தமகேச்வரரைக் காட்டிலும் சிரேஷ்டமானவேறுவஸ்து யாதொன்றுமில்லை. உங்களால் அளவற்ற ஒளியுள்ள எந்தப் புருஷர் பார்வதியோடு பார்க்கப்பட்டாரோ அவர் ருத்திரர். பார்வதி நிமித்தமாகப் பாலவடிவத்தை அவர்தாங்கினார். நீங்கள் என்னுடன் சேர்ந்து அவரையே சரணமடையுங்கள். மகிமைபொருந்தியவரான அவரே தேவர்; ஈச்வரர்; பிரபு' என்றுசொன்னார். பிறகு, பிரம்மதேவர் பரமசிவன் அருகில்வந்து, 'இவரேசிரேஷ்டர்' என்று அறிந்து அவரை வணங்கினார். பிரம்மா, 'நீர்யஜ்ஞம். நீர் ரக்ஷகர். நீரே லயஸ்தானம். நீர் உத்பத்திக்குக்காரணம். நீர்மகாதேவர். நீர் ஜ்யோதிஸ்; உத்தமமான பதம். உலகமுழுவதும் உம்மாலேவியாபிக்கப்பட்டிருக்கிறது. பகவானே! லோகநாதரே! இந்திரனுக்கு நீர் அநுக்கிரகம் செய்யும்' என்றுபிரார்த்தித்தார். இந்திரனுடைய கையானது முன்போலாகியது. ஆறுகுணங்களால் நிறைந்தவரும் தேவஸ்ரேஷ்டருமான ஈஸ்வரர் பத்தினியுடன் கூடியவராகத் தேவர்களுடைய விஷயத்தில் அருளுள்ளவரானார். அவரே ருத்திரர். அவரே சிவன். அவரே அக்னி. எல்லாம் அவரே. சரீரமில்லாதவரான அந்தப்பகவான் எல்லாத் தேவர்களுடைய சரீரத்தையும் தரிக்கிறார். எல்லாத்தேவர்களாலும் அந்தத்தேவர் ஒருவிதமாகவும் பலவிதமாகவும் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டிருக்கிறார். அந்தத்தேவருக்கு இரண்டு சரீரங்கள் உண்டு. ஒன்று கோரஸ்வரூபம்; மற்றொன்று மங்களகரமானது. அக்னி, விஷ்ணு, பாஸ்கரன் இவர்கள் பகவானுடைய கோரசரீரம். ஜலம், தேஜஸ், சந்திரன் இவைகளனைத்தும் அவருடைய ஸௌம்யமான சரீரம். வேதங்களிலும் புராணங்களிலும் அத்யாத்மசாஸ்திரங்களிலும் உத்தமமான ரகசியமாயிருப்பது தேவரான மகேஸ்வரரே. இப்படிப்பட்ட மகாதேவர் ஆறுகுணங்களால் நிறைந்தவர்; பிறப்பில்லாதவர். பாண்டுநந்தன! ஆயிரம்வருஷகாலம் இடைவிடாமல் நான்சொன்னாலும் (அந்த) பகவானுடைய எல்லாக்குணங்களும் என்னால்சொல்வதற்கு இயலாது. எல்லாவிதமான (துஷ்ட) க்ரகங்களாலும் பீடிக்கப்பட்டு எல்லாவிதமான பாபங்களுடனுங் கூடியவர்களாயிருந்தாலும் சரணாகதர்களான பக்தர்களைச் சரண்யரான அந்தப்பகவான் மிக்கபிரீதியுடனே எல்லா இடுக்கண்களிலிருந்தும் விடுவிக்கிறார். அபீஷ்டங்களுக்குப் பிரபுவாதலின் ஈசுவரரென்று சொல்லப்படுகிறார். மகாபூதங்களுக்கு ஈஸ்வரராயிருப்பதால் மகேஸ்வரரென்று சொல்லப்படுகிறார். அந்தத்தேவருடைய முகமானது சமுத்திரத்தில்நிலைபெற்று ஜலரூபமானஹவிஸைப்பானஞ் செய்துகொண்டு வடவாமுகம்என்று பிரசித்திபெற்றிருக்கின்றது. இந்தத்தேவர் எப்பொழுதும் ஸ்மசானங்களில் நித்தியவாசம் செய்கிறார். அந்த இடத்தில் ஜனங்கள்



இந்தஈஸ்வரரை வீரஸ்தானரென்று பூஜிக்கின்றார்கள். அர்த்தத்தோடு கூடியவையாக அநேகநாமதேயங்கள் ஈஸ்வரருக்கு இருக்கின்றன. வேதத்திலும் உத்தமமான 'சதருத்ரியம்' என்கிறமந்திரமானது இவர்விஷயமாகப் படிக்கப்பட்டிருக்கின்றது. இந்த மகாத்மாவுக்கு அனந்தருத்ரம் என்கிற உபஸ்தான மந்திரம் இருக்கின்றது. தேவர்களுக்கெல்லாம் இவர் முந்தினவர். பசுக்களை ரக்ஷிப்பதாலும் பசுக்களுடன் ரமிப்பதாலும் பசுக்களுக்கு அதிபதியாயிருப்பதாலும் பசுபதியென்று சொல்லப்படுகிறார். இவருடைய திவ்யலிங்கமானது பிரம்மசர்யத்தினால் நிலைபெற்றிருத்தலாலும் இவர் உலகங்களைப் பெரியவடிவமுள்ளவையாகச் செய்தலாலும் மஹேஸ்வரரென்று எண்ணப்பட்டிருக்கிறார். ரிஷிகளும் தேவர்களும் கந்தர்வர்களும் அப்ஸரஸ்திரீகளும் இவருடைய லிங்கத்தை அர்ச்சிக்கின்றார்கள். அவருடைய ரூபமானது பலவாறாக இருக்கின்றமையால் அந்தமகேஸ்வரர் பஹுரூபர் என்று சொல்லப்படுகிறார். அவர் குரோதத்தினாலே அனுபிரவேசம் செய்ததால் சர்வரென்றும் எண்ணப்படுகிறார். அவருடைய ரூபமானது தாம்ரவர்ணமாக இருத்தலால் தூர்ஜடியென்றும் சொல்லப்படுகிறார். விஸ்வேதேவர்கள் அவரிடத்தில் சான்னித்தியம் செய்தலால் விஸ்வரூபரென்றும் எண்ணப்படுகிறார். ஈஸ்வரர் ஆகாசம், ஜலம், பூமி இம்மூன்று தேவிகளையும் அடைதலால் திரியம்பகரென்று சொல்லப்படுகிறார். மனிதர்களுக்கு மங்களத்தை விரும்பிக்கொண்டு சர்வார்த்தங்களையும் விருத்திசெய்வதனால் இவர் சிவனென்று எண்ணப்படுகிறார். ஆயிரங் கண்களையுடையவராகவும் பதினாயிரங்கண்களை யுடையவராகவும் நாற்புறத்திலுங் கண்களையுடையவராகவும் இருந்துகொண்டு பெரிதான உலகமனைத்தையும் ரக்ஷித்தலால் மகாதேவரென்று எண்ணப்படுகிறார். நித்யம் ஸ்திரமான லிங்கத்துடனிருப்பதனால் ஸ்தாணுவென்று சொல்லப்படுகிறார். சூரியசந்திரர்களுடைய காந்திகள் கேசம் என்று பெயருடையவை. அவைகள் முக்கண்ணரிடத்தில் நிலைபெற்றிருப்பதால் அவர் வ்யோமகேசர் என்று சொல்லப்படுகிறார். முக்காலங்களிலுமுள்ள உலகமனைத்தும் மிச்சமில்லாமல் பவரென்று பெயர்கொண்ட பரமேஸ்வரரிடத்தில் நிலைபெற்றிருப்பதால் பூதபவ்யபவோத்பவர் என்றுசொல்லப்படுகிறார். கபி என்பதற்கு ஸ்ரேஷ்டம் என்பது பொருள்; விருஷம் என்பது தர்மம்; ஆதலால், பகவானான தேவதேவர் விருஷாகபி யென்று சொல்லப்படுகிறார். பிரம்மா, இந்திரன், வருணன், யமன், குபேரன் இவர்களைத் தண்டித்து சம்ஹரித்தலால் ஹரர் என்று சொல்லப்படுகிறார். மகேஸ்வரர் நெற்றியில் ஒருகண்ணை உண்டுபண்ணிக்கொண்டார்; ஆதலால் முக்கண்ணர் என்றுசொல்லப்படுகிறார். எந்த மனிதன் ஈஸ்வரருடைய சரீரத்தையும் லிங்கத்தையும் நித்யம் பூஜிக்கிறானோ லிங்கபூஜகனான அவன் பெரிதான ஐஸ்வரியத்தை அடைகிறான். எல்லாவற்றையுங் கொளுத்துவதனாலும், தீக்ஷணராகவும் உக்கிரஸ்வரூபியாகவும் பிரதாபமுடையவராகவும் விளங்குவதனாலும் ருத்ரரென்று சொல்லப்படுகிறார். பார்த்த! உனக்கு எதிரிலிருக்கின்ற இவர் தேவர்; மகாதேவர். யுத்தத்தில் சத்துருக்களைக் கொல்லுகின்றபினாகபாணியானவர் உன்னால் காணப்பட்டார். தோஷமற்றவனே! கிருஷ்ணனால் ஸ்வப்னத்தில் எவர் சிறந்த மலையுச்சியில் காண்பிக்கப்பட்டாரோ, எவரால் உனக்கு அஸ்திரங்கள் கொடுக்கப்பட்டனவோ, எவருடைய அஸ்திரங்களாலே உன்னால் அசுரர்கள் கொல்லப்பட்டார்களோ அப்படிப்பட்ட ஷாட்குண்ய பரிபூரண

ரான மகாதேவர் யுத்தத்தில் உன்னுடைய முன்னிலையில் செல்லுகின்றார். பார்த்த! ஈஸ்வரருடைய சதருத்ரியமானது உனக்கு விரித்துரைக்கப்பட்டது. இந்தஸ்தோத்திரமானது விரும்பினவற்றையெல்லாம் அளிப்பது பரிசுத்தமானது: எல்லாப்பாவத்தையும் அழிக்குந்திறமை யுள்ளது. எந்த மனிதன் இந்த ஸ்தோத்திரத்தைக் கேட்கிறானோ அந்த மனிதன் எல்லாச் சத்துருக்களையும் ஜயித்து ருத்ரலோகத்தில்கொண்டாடப்படுகிறான். மனிதர்களுள் எவன் ஈசுவரரைப்பக்தியுடன் பூஜிக்கின்றானோ அந்தமனிதன் த்ரியம்பகரிடத்தினின்று வேண்டிய இஷ்டங்களை அடைகிறான். கௌந்தேய! போ. யுத்தம் செய்'' என்றுசொன்னார்.

---

## சப்த விடங்கத் தலங்கள்.

(சுதுமலை. சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் அவர்கள்.)

### தேவேந்திரனிடத்தில் முசுகுந்தச் சக்கிரவர்த்தி வாங்கிவந்த விடங்கங்களைப் பிரதிஷ்டை செய்த இடங்கள்.

கடநாகை நள்ளாறு காறாயல் கோளிலியூர்
மடறைக முத்தீனும் வாய்மூர் நன்மறைக்கான
முடறுகுந் தலமாறி லோராறு வடிவுகொண்ட
படநாக மதிவேணிப் பரஞ்சுடரை யமர்வித்தான்.

இ - ள். திருநாகைக் காரோணம் - நாகபட்டணம், திருநள்ளாறு, திருக்காறாயல் - திருக்காறைவாசல், திருக்கோளிலியூர் - திருக்குவளையூர், இளமை பொருந்திய சங்குகள் அழகிய முத்துக்களையீனும் திருவாய்மூர் - திருத்தென்திருவாய்மூர், வேதாரணியமாகிய இவ்வாறு தலங்களிலும் ஆறாகிய திருவடிவங்களைக் கொண்ட படம் பொருந்திய சர்ப்பத்தையும் சந்திரனையும் பகைநீக்கியணிந்தருளும் திருச்சடையையுடைய சிவபெருமானை உடனேபிரதிஷ்டை செய்வித்தனன் என்பதாம்.

1. திருவாரூரிலே சோமாஸ்கந்த மூர்த்தங்களில் சிறந்ததும் முதன்மைபெற்ற ஸ்ரீவிஷ்ணுமூர்த்தி நெடுநாட் பூசித்து வந்தமூர்த்தியைத் தேவேந்திரனுக்குக் கொடுக்கப்பட்ட அஜபாநடன தியாகராசரையே பிரதிஷ்டை செய்யப்பட்டது. தியாகராசருக்கு நடனமே விசேஷமெனச்சொல்லுவர். இம்மூர்த்திக்கு யந்திரம் மார்பிலமைந்திருப்பதால் மார்பு மறைக்கப்பட்டேயிருக்கும். இவருக்குத்தான் வீதிவிடங்கரெனப்பெயர்.

2. நாகபட்டணத்திலுள்ள மூர்த்திக்கு சுந்தரவிடங்க ரெனப்பெயர். பாராவாரதடங்க நடனம் [வீசியநடனம்]

3. திருநள்ளாற்றில் உள்ளமூர்த்திக்கு நகவிடங்கரெனப்பெயர். உன்மத்த நடனம்.

4. திருக்காறாயல் மூர்த்திக்கு மகாவிடங்கரெனப் பெயர். குக்குட நடனம்.



5. திருக்கோளிலியூர் மூர்த்திக்குஅவனிவிடங்க ரெனப்பெயர். பிருங்கநடனம்.

6. திருவாய்மூர் மூர்த்திக்கு நீலவிடங்கரெனப்பெயர். கமலநடனம்.

7. வேதாரணிய மூர்த்திக்குப் புவனிவிடங்கரெனப் பெயர். ஹம்ஸபாதநடனம்.

இவைகளுள் திருநள்ளாற்றில் நளச்சக்கரவர்த்திக்குப் பீடித்திருந்த சநிபகவான் நீங்கியதாகக் கூறுவர். இத்தலத்திலே சநீஸ்வரசன்னிதானம் மிகவிசேஷ ஆராதனைகளுண்டு. புரட்டாசி மாசப் பூரணையில் தேவேந்திரன்வந்து பூசிக்கின்றானென்று காலங்கண்ட பெரியோர்கள்வாக்கு.

திருக்காறாயலில் இப்போதும் இந்திர பூஜை கன்னியாமாச பௌர்ணமியில் நடக்கிறது.

திருக்கோளிலியூரில் வீமன் பகாசுரனைக்கொன்ற பாவம் நீங்கும்படி பூசித்ததாகக் கூறுவர்.

விசுவகர்மனால் நியமிக்கப்பட்ட ஆறுமூர்த்திகளும் விடங்கரெனச் சொல்லப்படும் என்னையோவென்றால் ஏனைத்தச்சர் போல உளி முதலிய கருவிகளைக் கொண்டு இயற்றாது இவ்விசுவகன்மனானவன் தன்மனத்தால் நினைத்து நிருமித்தானாகலினென்க. டங்கம்-உளி, வி-இன்மை எனவே உளிமுதலியவைகளைக் கொண்டு வேலை செய்யப்படாதவரென்பதாம்.

## ஐயவினா?

சிவநேசச் செல்வர்காள்!

தேவேந்திரன், விஷ்ணு தாமான்மார்த்தமாக வைத்துப்பூசித்த சோமாஸ்கந்த மூர்த்தியை வாங்கிவந்து தனக்கு ஆன்மார்த்தமாக வைத்துப் பூசித்து இடையில் முசுகுந்தனுக்குக் கொடுத்தபாவத்தினால் பூனையவடிவத்தை யடைந்தான்.

விஷ்ணு பூசித்துவந்த மூர்த்தியை தேவேந்திரனுக்குஇடையிற் கொடுத்த பாவத்தினால் ஒரு தண்டத்தையும் பெற்றிலர். இதற்கு நியாயம் இப் பத்திரிகை வாயிலாக வெளியிடும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

ச. சோமாஸ்கந்தன், திருநெல்வேலி.

## கேதாரவிரதம்.

விரதங்களைச் சௌரமானத்தில் அநுட்டிக்கவேண்டும். சாந்திரத்திலநுட்டிக்கூடாதெனகாரணாகமத்தாலும்; ஏனைய ஆகமங்களாலுமுணரலாம்,

கன்னிராசிக்குச் சூரியன் வந்தகாலத்து கிருஷ்ணசதுர்த்தசியை அந்தமாகக்கொண்டு அநுட்டிப்பதுமுறை.

ஒரு மாதத்திலிரண்டு நேர்ந்தால் கடைச்சதுர்த்தசி பிரதானம். அதிமாத விவாதம் சாந்திரமானிகளுக்கே.

கமலகணபதி, திருச்செங்கோடு.

உ

# சிவபூசை.

(அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள்.)

சிவபூசையாவது புஷ்பம் திருமஞ்சனம் முதலிய உபகரணங்கள் கொண்டு, ஆத்துமசுத்தி தானசுத்தி திரவியசுத்தி மந்திரசுத்தி இலிங்க சுத்தி என்னும் பஞ்சசுத்திகளும் செய்து, சிவலிங்கத்தின் பீடத்திலே, ஆதாரசத்தியாதி குடிலாசத்தியந்த பதுமமாகிய சிவாசனம்பூசித்து, அதன் மேல் இலிங்கத்திலே, வித்தியாதேகமாகிய மூர்த்தியைநியாசம்செய்து, அவ் வித்தியாதேகத்துக்குச் சீவனாய் உள்ள நிஷ்களரூபரும், ஞானானந்தமயரும் சர்வகர்த்தாவும் சர்வவியாபகருமாகும் பரமசிவனாகிய மூர்த்திமானைத் துவாதசாந்தத்தின் மேலே தியானித்து, முன்னே நியாசம்செய்த வித்தியாதேகத்தில் ஆவாகித்து "சுவாமி, சர்வஜகத்துக்கும் நாதரே, பூசையின் முடிவு எதுவரையுமோ அதுவரையும் நீர் பிரீதியுடன் இவ்விலிங்கத்திலேயே சாந்நித்தியராய் இரும்" என்று விண்ணப்பஞ்செய்து, ஸ்தோத்திரம்' பிரதக்ஷிணம், நமஸ்காரம் பண்ணி முடித்தலாம். [வித்தியா தேகமாவது பஞ்சகிருத்ய உபயோகிகளாகிய ஈசானம்முதலிய மந்திரங்களினாலே, சிரம் முதலாகக் கற்பிக்கப்படும் சுத்திசரீரமேயாம்]

மோக்ஷத்தை அடைய இச்சிக்கின்ற அடியவர்கள் சிவாகம விதிப்படி சிவபூசை செய்தல்வேண்டும். அதற்கு அன்பினாலே தொண்டு செய்பவர்களும், பூசையைத் தரிசித்தவர்களும் பிறவித்துன்பம் நீங்கிச் சிவலோகமடைவார்கள்.

சிவபூசை செய்யாது அன்னபானாதிகளை மறந்தேனும் உட்கொள்ளவொண்ணாது. உட்கொள்ளுகில், அவைகளை உவாந்தித்து, நீரில் ஸ்நானம்செய்து, இருமுறை சிவபூசை செய்து, அத்தினம் முழுதும் உபவசியாயிருந்து, பஞ்சாக்ஷரத்தைப் பதினாயிரம் உருச்செபித்து, மற்றைநாளில் விசேஷபூசை செய்தல்வேண்டும். 'சிவபெருமானை வழிபடும் அடியார்கள் அன்னத்தைப்புசிப்பர்' என்று இருக்குவேதம் கூறுகின்றது. கூறவே, நாடோறும் உண்ணுதற்கு முன்னர்ச் சிவபூசை செய்யவேண்டும் என்பது பெறப்படும். திருநாவுக்கரசு நாயனாரும் 'உண்பதன்மூன் மலர்பறித்திட்டுண்ணாராகில்' எனவும், 'அருப்போடுமலர் பறித்திட்டுண்ணவூரும்' எனவும் அருளிச்செய்தனர். இருக்குவேதத்திலே 'மருத்துக்கள் பொருளும் அருளுமாம் உமது செல்வத்தை அடையுமாறு சிவபெருமானது விசித்திரரூபமாகிய மகாலிங்க மூர்த்தியை அபிஷேகாதி பூசைசெய்தார்' என்று கூறப்பட்டிருக்கிறது. பஸ்மஜாபாலோப நிடதமும் 'சிவலிங்கத்தைத் தினந்தோறும் காலை மாலை உச்சி யென்னும் முப்பொழுதினும்பூசிக்க' என்று கூறுகின்றது. திராவிடவேதமும்,

இயக்கர் கின்னரர் யமனொடு வருண ரியங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்கமில் புலிவான ர நாகம் வசுக்கள் வானவர் தானவரெல்லாம்



அயர்ப்பொன் றின்றி நின்றிரு வடியதனை யர்ச்சித்தார் பெறுமாரருள்கண்டு
திகைப்பொன் றின்றி நின்றிருவடி யடைந்தேன் செழும்பொழிற் றிருப்புன்
கூருளானே [

எனச் செப்புகின்றது.

சிவபூசையின் பெருமையை உலகத்தாருக் கறிவிக்க நினைந்தபேராருளாலே, உமாதேவியாரும், விநாயகக்கடவுளும், சுப்பிரமணியக்கடவுளும், காஞ்சீபுரம் திருச்செங்காடு திருத்தணி முதலிய ஸ்தலங்களில் சிவலிங்கத் திருவுருவைப் பூசித்தார்கள். உமாதேவியார் பூசித்தமை கந்தபுராணம் திருநகரப்படலம் செய்யுளானும், விநாயகர் பூசித்தமை, கயமுகனுற்பத்திப் படலம் உசுச ம் செய்யுளானும், சுப்பிரமணியர் பூசித்தமை குமாரபுரிப் படலம் எக-ம் செய்யுளானும், மீட்சிபடலம் கூகூ-ம் செய்யுளானும், வள்ளியம்மை திருமணப்படலம் உகூ௦-ம் செய்யுளானும் அறிக.

சிவலிங்கபூஜா பலத்தினாலேயே சிலர் சாலோகாதி பதவிகளை அடைந்தார்கள். சிவபூசாபலத்தினாலேயே தேவர் அசுரர் மானுடர் முதலாயினோர் ஐசுவரியங்களோடு வாழ்கின்றார்கள். வெற்றி வேண்டி அநேகர் சிவபூசை பண்ணி, சத்துருக்களை வெற்றிகொண்டனர். சிலர்வேண்டிய வேண்டியாங்கு புத்திரர் முதலாய பேறுகளை அடைந்தார்கள். சிலர்பூசை செய்து தங்கள் அகங்காரத்தை நீங்கப்பெற்றார்கள். சிலர் பூசைசெய்து, தாங்கள் செய்துகொண்ட அதிபாதகம் நீங்கப்பெற்றார்கள். சிலர் பூசைசெய்து, பிரமகத்தியாதி தோஷம் நீங்கினார்கள். சிலர் சிவபூசைசெய்து, காலத்தைக் கடந்தார்கள். இங்ஙனம் உயர்திணையவேயன்றி, அஃறிணையவும் சிவபூசையினாலே வேண்டியவரங்களைப் பெற்றன.

"சிவபெருமானாகிய சம்புவே பதி; பிரமா முதலிய நாங்கள் பசுக்கள் பிரமவிட்டுணுக்களாகிய எங்களாலும் பிறராலும் பூமியின்கண்ணே சிவலிங்கங்கள் தாபித்து, விதிப்பிரகாரம் பூசிக்கப்பட்டமையே அதற்குச் சான்று" என்று தக்ஷகாண்டம் கூறுகின்றது.

## அரிபிரமர் பிறப்பிறப்பு நீங்கப்பூசித்தது.

திருமால் முன்னொரு காலத்திலே பிறப்பிறப்புக்களை நீங்கும்படி திருவெண்காட்டை அடைந்து, அப்பெருமானைக் கட்புலன்களாற் றரிசித்து, உருகிய மனத்தொடு வணங்கிப்பூசித்தார். சிவபெருமான் அவரைநோக்கி 'நீவிரும்பிய வரம்யாது' என்று வினவியருளினார். 'பஞ்சகிருத்திய பதியாகிய கடவுளே! தேவரீர் சர்வசங்காரஞ் செய்யுங்காலத்தில், உலகத்தோடும் அடியேன் அழிகின்றேன், மகாசிருட்டி ஆரம்பத்தில் தோன்றுகின்றேன்; அடியேன் இனிப் பிறந்திறந்து, இளைப்படையாவண்ணம் தேவரீரது திருவடிகளில் ஒடுங்க விரும்புகின்றேன்' என்றுவிண்ணப்பஞ்செய்தார்.

சிவபெருமான் விட்டுணுவைநோக்கித் திருவருள் பாலித்து, 'இனிநீ வருந்தாதே; மகா பிரளயகாலத்தில், நமது நெற்றிக்கண்ணினின்றும் தோன்றுகின்ற அக்கினியால் உனது உடலைத் தகித்து அச்சாம்பரை அணிவோம்; உன்னுடைய எலும்புகளையும் மாலையாக அணிந்துகொள்ளுவோம்; அதன் பின்னர் சாரூபமளிப்போம்; இறுதியில் நாமே நீ எனப்பெறுவாய்" என்று அனுக்கிரகித்து மறைந்தார். பின்பு விட்டுணு சிவார்ச்சனையை முறைப்படி பலகாலஞ் செய்தனர். இறுதியில் சிவபெருமானுடைய உபய

பாதங்களில் ஒடுங்கினர். பிரமாவும் தவஞ்செய்து, இங்ஙனமே, சிவபெருமானிடத்தில் வரங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இதனை உபதேசகாண்டம் திருமால் சிவார்ச்சனைச் சருக்கத்தாலும், கந்தபுராணம் ததீசியுத்தரப் படலத்தாலும் (செ. ௯ - ௧௫) அறிக.

## விட்டுணு பவளநிறம் பெறப்பூசித்தது.

முன்னொரு ஞான்று திருப்பாற்கடலிலுள்ள சர்ப்பசயனத்தில் வீற்றிருந்த திருமால் சிந்திப்பார்:—"ஓர் திருவிளையாடல் காரணமாக எம்மிறைவராகிய சிவபெருமான் இறைவியாரை நோக்கிக் காளி என்றழைக்க, அவர் யான் இக்கருநிறத்தை நீக்கிக் கௌரியாகும் வண்ணம் அருளுக என்றிரந்து அப்பெருமானாரது உத்தரவின்படி காஞ்சியையடைந்து, பூசித்துப் பொன்னிறத்தைப் பெற்று விளங்கினர். யானும் அங்ஙனமே சிவபெருமானைப் பூசித்து, பவள நிறமடைவேன்" என்று சிந்தித்தார். சிந்தித்தவர் காஞ்சிநகரடைந்து, வீரட்டகாசத் தேவரைப் பூசித்து, வணங்கப் பரமசிவன், எழுந்தருளி வந்து, பவளநிறத்தைக் கொடுத்தருளினர். திருமால் கரிய வடிவநீங்கி, பவளவண்ணத்தைப் பெற்றுப் பாற்கடலை அடைந்தார். இக்காரணத்தினால் அவருக்குப் 'பவளவண்ணன்' என்னும் பெயர் எய்திற்று.

இதனைக் காஞ்சிப்புராணம் வீரட்டகாசப் படலத்தால் அறிக. கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப்படலம். செ. ௨௯:

பாற்கட லமளிதன்னிற் பாவையர் புறத் துவைகக்
காற்கடற் பவளவண்ணன் கருணையோ டமருமாபோல்

---

## பிள்ளையார் நோன்பு நிர்ணயம்.

இவ்விரதத்தை மார்கழிமாதச் (சுக்கிலபக்ஷத்தில்) சஷ்டியிருந்தாலும் இல்லாவிடினும் சதயநக்ஷத்திரத்தில் அநுட்டிக்க வேண்டுமென்று சூக்குமாகமத்திலும், மார்கழிமாதத்துத் திருவாதிரைக்கு முன் பத்தாவது நாளில் சஷ்டியிருந்தாலும் சரி சதயம் இருந்தாலும் சரி அந்நாளில் அநுட்டிக்க வேண்டுமென்று யோகஜாகமத்திலும், கூறப்பட்டிருப்பதாக சைவகாலவிவேகம் என்னும் நூலில் கூறப்பட்டிருக்கிறது.

காரணாகமத்தில் விநாயகருக்கு பத்துநாள் திருவிழா நடத்தி பத்தாவது நாளில் ஆருத்ராவிரதத்தை அநுட்டிக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. ஆகையால், நிகழும் பவ௵ கார்த்திகை௴ ௨௭௳ சஷ்டியும் சதயமும் இருப்பதாலும், மார்கழிமாதத்துத் திருவாதிரைக்கு முன் பத்தாவது நாளாக இருப்பதாலும், அந்நாளே பிள்ளையார் நோன்பு அநுட்டிக்கத் தக்கநன்னாளாகும். யாழ்ப்பாணம் பஞ்சாங்கத்திலும் கார்த்திகை௴ ௨௭௳ யென்றுதான் குறிக்கப் பெற்றிருக்கிறது.

சிவாகமசங்கம், தேவகோட்டை.

உ

## கண்முன் காட்டென்பார்க்கு விடை.

(ஐயங்கார் குளம் திரு. அ. க. பொன்னுசாமி முதலியார் அவர்கள்.)

அறிஞர்களே! சிலர் கடவுளைக்கண் முன்காட்டென்கின்றனர். கண்முன் காணாமையால் கடவுள் இல்பொருளாகாது. கடவுள், இலையென்பவர் சிலர்; உளரென்பவர் பலர். ஆகையால்,

"உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்."

என்பது தமிழ்வேதம். கடவுளில்லை என்பவர் இதனை அறிந்து அடங்கவேண்டும். தீயவொழுக்க முடையவரை அலகையென்பது தருமம். கடவுணிந்தையைக் காட்டிலும் தீமையில்லை. 'தெய்வமிகழேல்' 'தெய்வஞ்சீறிற் கைதவமாளும்' என்பது ஔவையாரமுதவாக்கு. இனிக் கடவுள் ஏன் கண்ணுக்குப் புலப்படவில்லை? என்பதற்கு விடை கூறுதும். கண்ணுக்குக் காணப்படாதபொருள் இன்னம் பலவுள. சப்தம் சுவை வாசனை கண்ணுக்குத் தெரியா. மனம் ஆன்மா கண்ணுக்குத்தெரியா: மனம் என்பது அந்தக்கரணம். இவைகளெல்லாம் கண்ணுக்குத் தெரியாமையால் இல்பொருளாகா. இனித் தேகேந்திரியங்களை விசாரித்திடின் தேகமொன்றினையுங் காணாது. அத்தேகத்தை கண்காணும். அக்கரணங்களை ஆன்மா காணும். அவ்வான்மாவைச் சிவம் காணும். இன்னுமிதனை விரிப்பின் கண் தேகத்தை மாத்திரங்காணும். கரணங்கள் தேகத்தையும் கண்ணையுங் காணும். ஆன்மாதேகத்தையுங் கண்ணையுங் கரணங்களையுங் காணும். சிவம் தேகத்தையும் கண்ணையும் கரணங்களையும் ஆன்மாவையுங் காணும். இனி ஆன்மா சிவத்தைக் காணாது. கரணங்கள் ஆன்மாவையுஞ் சிவத்தையுங் காணாது. கண்ணானது கரணங்களையும் ஆன்மாவையும் சிவத்தையும் காணா. தேகமானது கண்ணையும் கரணங்களையும் ஆன்மாவையும் சிவத்தையுங் காணாது. இவ்வுண்மையை அறிவார்களானால் கடவுளைக் கண்ணிற்குக் காட்டென்று கூறார்கள். ஆதலால் தேகத்திற்குக் காணப் படாமையால் கண் இல்பொருளாகாது. கண்ணுக்கு வாசனை சுவைமுதலிய காணப்படாமையால் அவைகள் இல்பொருளாகா. கண்ணுக்குக்காணப்படாமையால் அந்தக்கரணங்கள் இல்பொருளாகா. அந்தக்கரணங்களுக்குக் காணப்படாமையால் ஆன்மா இல்பொருளாகாது. ஆன்மாவுக்குக் காணப்படாமையால் சிவம் இல்பொருளாகாது. ஆதலால் அந்தக்கரணங்களுக்கும், ஆன்மாவுக்குங் காணப்படாத சிவத்தை எங்ஙனம் ஊனக் கண்ணுக்குக்காட்ட முடியும்? ஆன்மாவாலறிந் தனுபவிக்கின்ற இன்பம் எப்படி கண்ணாற் காணப்படாது உணர்வால் அறியப்பட்டு உண்மை காணப்படுகிறதோ, அதுபோல அறிவை மறைத்திருக்கும் அஞ்ஞானம் ஆசாரியாது அனுக்கிரகத்தால் நீங்கி 'நீயும் நானுமாய் ஏகபோகமாய்" இருக்கும் என்ற அநுபூதியாலறிந் தனுபவிப்பதன்றி அகளமாய் யாரும் அறிவரிய பொருள் கண்ணுக்குக் காட்டப் படுவதன்று. ஆன்மாக்களின் மாட்டு

முகிழ்த்த பெருங்கருணையால் அப்பொருள் 'சகளமாய் வந்ததென் றுந்தீபற தானாகத் தந்ததென் றுந்தீபற' என்றபடி சகளவடிவ வுபாசனை முதிர்ச்சியாலும் பஞ்சாட்சர செபமுதிர்ச்சியாலும் பாசம் நீங்கி பதிஞானத்தால், அவனருளே கண்ணாகக்கொண்டு கடவுளைத் தம்முள்ளத்தே காண்பார்களாக.

## திருக்கார்த்திகைத் தீபம்.

சில ஆகமங்கள் நக்ஷத்திரத்தையும், சில ஆகமங்கள் பர்வத்தையும் விசேடித்துரைக்கின்றன

சோமசம்பு சிவாசாரியர் மாசபூஜாவிதியில் சித்திரை வைகாசி ஐப்பசி தை மாசி பங்குனி இவைகளுக்கு நக்ஷத்திரத்தையும், ஆனி ஆடி ஆவணி புரட்டாதி கார்த்திகை மார்கழி இந்த மாதங்களுக்கு பர்வத்தையும், பிரதானமாகவும், கார்த்திகை மாச பூசையில் பர்வத்தில் தீபபூஜை செய்கவென்றும் கூறியுள்ளார்.

ஆக இரண்டும் பிரதானமே. அந்தந்த ஸ்தலங்களின் வழக்கப்படி நடப்பதே முறை. கமலகணபதி, திருச்செங்கோடு.

* இவ்வாண்டில் பௌர்ணமியைப்பிரதான்மாகக் கொண்டு திருமயிலையாதிய கடற்கரையோரங்களிலுள்ள திருத்தலங்களில் நடையும் திருவண்ணாமலை, குன்றக்குடியாதிய மலைகளிலுள்ள திருத்தலங்களில், கார்த்திகை நட்சத்திரத்தை பிரதானமாகக் கொண்டு கூடும் கார்த்திகை மாதத் திருக்கார்த்திகைதீபம் ஏற்றப்பெற்றது.

## அறநெறி.

ஜீவகாருண்யம் சிறந்தினிதோங்குக!

அறிவுன் னோரே! அறிவுன் னோரே!!
அறநெறி யொழுகி யருளே பெறுவோம்
பெற்றதாய் தந்தை பேர்குரு வாசான்
உற்றால் அந்தணர் ஒப்பி லாப்பசு
தெய்வங் கொள்கைத் தேமொழிப் பாலர்
மெய்வழி யுதவும் பாவை மாரொடு
அறநிலை யாவும் அழித்த வர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழிவா யுளவே! ஆனால்,
என்னா ளுமார்தர்க் கிணையிலாத் தொண்டுகள்
அந்நாள் முதலாய் அளிக்குநல் லுயிராம்
ஆடுகோ ழிகளை அலறக் கொல்லின்
நீள்நர கன்றிக் கழிவா யிலையென
வார்கட லுலகில் வழங்கிடு நூல்கள்
நேர்படக் கூறும் நேர்மையை உணர்மின்!
சத்திய மிதுவே சகலருங் கொண்டிதை
உத்தம உணவே உண்டெந் நாளும்
உயிரைக் காத்து உய்குவம் வம்மே!!

சுப்பிரமணிய உடையார், சித்தாந்தமாணவர்.



# ஒரு பெரியார் பிரிவு.

நாகை நீலலோசனி பத்திராதிபரும் செந்தமிழ்ச் செல்வருமாகிய பெரியார்: ஜி. சதாசிவம் பிள்ளையவர்கள் கார்த்திகைஅ௨ வெள்ளிக்கிழமை இரவு சிவத்திற்கலந்தனர் எனவும், கஅ௨ முத்திச் சடங்காற்றுவதாகவும் அவர்களது திருமகள் நீலாம்பாள் இடமிருந்து வந்த விஞ்ஞாபனம் கண்டு அப்பெரியாரது பிரிவுக்கு அனுதாபமுறுகின்றோம். அவர் தம் சீவிய காலத்திலேயே "செந்தமிழ்ப் புலவர்களுக்குச் சிறுவிண்ணப்பம்" என ஒருவெளியீட்டைப் பரப்பியுள்ளார்கள். அது நம்சிவநேசன் ஆண்டு-௫, வாரம்-௬௨, ௬௩ ல் வந்துளது. அதிலிருந்து அவர்களது உளக்குறிப்பும் சைவப்பற்றும் தமிழ்ப்பற்றும் அவர்களுக்கு இப்போது ௭௩ ஆண்டுகளாயின என்பதும் பிறவும் தெளிவாகும். அவ்விண்ணப்பத்தில் "தென்னனு யுலகாண்ட சிவபிரான் திருமலையைச் சேர்ந்தியானும் மன்னுமவருடன் கூடி வாழ்ந்திருக்கப் போதலே மாண்பதாமே" எனவும்,

"......விமலனடியில் விரைந்தேகப் பொய்நீரொழுக்கப் புலவீர்காள்! புனித ஆசிபுகலும் வண்ணம்—கையால் தொழுதேன்......" எனவும்,

வேண்டி யுள்ளார்களாதலின் அவர்களின் ஆன்மா, மிகஅமைதியடன் 'வேண்டுவார் வேண்டுவதே யீவான்' ஆகிய நம் சிவபரம் பொருளின் திருவருள் நீழலிற்றிளைத்து இன்புறுவதாக.

(மகாவித்துவானாகிய அவர்கள் பரிபூரணமானதைக்குறித்து, போளூர் போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் திரு. வி. சாமிநாதபிள்ளை அவர்கள் கூறிய )

### கையறு நிலைச்செய்யுட்கள்.

கற்றமிழி னல்நீல லோசனிப்பேர்ப் பத்திரிகை நடத்தி யெங்கும்
உற்றபுகழ் விரித்தசதா சிவப்பெயர்கொள் புலவநின துயிரைக் கொண்டு
கற்றவர்கல் லார்கவலப் புரிநமனைத் தருமனெனக் கவிஞ ரெல்லாம்
சொற்றதுபொல் லாப்பாம்பை நல்லபாம் பெனும்வழக்காஞ் சொல்லுங்காலே

அன்போடுமெனைமுனநின் றமிழ்புலமை நடத்திடத்தேயமர்த் தும்வண்ணம்
முன்போ துவித்தனைதாய்தந்தையினுந்தயையுடையாய்முடிந்தாய்வானுள்
துன்போதற் கரிதந்தோ சதாசிவப்பேர்ப் பாவலவ சுகுண நின்னைப்
பின்போர்காற் காண்டுவமோ பெறலருஞ்சீர் பெற்றோய்நீ பேசு வாயே

கல்வியினல் மதுரரசக் கவிபாடுந் தகைமையினற் கருது பாடஞ்
சொல்வதனு லவையில்விரி வுரையாற்றுந் திறத்தினற் சுகுண மாதிப்
பல்விதத்தாற் சிறந்தமைந்த சதாசிவப்பேர்ப் பண்டிதனும் பாவ லோனைக்
கொல்வதனு லென்பெற்றாய் பழிபெற்றாய் நமனேநீ கொடியை யந்தோ.

வயற்றரளந் திகழ்ராம நாதபுரச் சேதுபதி மகிப ஞன
புயற்றகவு நிகர்கொடைப்பாற் கரபூமான் மகிழ்சமூகப் புலவர் முன்னர்
இயற்றமிழ்ப்பா வலவநினக் கிருகைத்தோ டாவாதி யீயப்பெற்றாய்
செயற்றமிழ்ப்பா வலர்பிறர்க்குண் டோவிங்ஙன் சதாசிவநீ திரும்பு வாயே.

அருந்ததியார் நிகர்நினது புதல்வியர்தா மழவுமற்றை யன்ப ரேங்கி
வருந்தவுநல் லன்புநிறை பேரர்பேர்த் திகளழவு மவனி நீத்துப்
பொருந்தினைவிண் புலவர்குழாத் திருசரியோ விதுமுறையோ புலமை மிக்க
திருந்தியசீர்ச் சதாசிவப்பேர்ப் பாவலனே வந்தொருகாற் செப்பு வாயே.

புவிபுகழுஞ் சைவமடத் ததிபரெலா மனத்துமகிழ் பூப்ப நாளும்
கவிபுகலுஞ் சதாசிவப்பேர்ப் பாவலநீ விண்புகுந்த கடிய மாற்றம்
செவிபுகலுந் திடுக்கிட்டு நடுநடுங்கிப் பதைபதைத்துச் செயலொன் றின்றி
யொவ்வியம்போற் றிகைத்தனமா லிவ்வருத்த மொழிவதெப்போ துரைத்தி
[டாயே.

செந்தமிழ்த்தெள் ளமுதொழுகுந் திருவாயுஞ்செஞ்சொல்லுஞ்சிறக்குமன்பு
வந்தொழுகு மலர்விழியு மதிமுகமுங் கண்டவருள் வசமா வாரே
அந்தகனு தலினியமன் நினைத்தனது வசமாக்கி யகன்றான் போலும்
எந்தவகை நினைமறப்பேம் சதாசிவப்பேர்ப் பாவலனே இனியா மந்தோ.

முன்னமொரு காலென்னைத் துறைசையிலம் பலவாண மூர்த்தி முன்னர்
நன்னரழைத் தேகியிவன் நுமதன்பன் விசுவலிங்க நாவ லோன்றன்
பன்னுதிருப் புதல்வன்எனப் பகர்ந்தென்றன் கவிகேட்கப் பண்ணி யாங்கே
பொன்னமர்பட் டாடையருள் வித்ததுதான் சதாசிவநான் மறக்கப் போமோ

மாயிருஞா லத்தெவரே நினைப்போலத் திருவுடையார் மதித்துத் தந்த
வாயிரவா யிரரூபபாப் பரிசுபெற்றார் அதிகவிலை யணிபெற் றார்நற்
றாயினுநல் லன்பமரம் பலவாண தேசிகராற் றமிழ்ப்பாப் பெற்றார்
வீயினுநின் புகழ்வீயா திஃதுண்மை சதாசிவமாய் விளங்குவோயே.

என்றுதை யிடம்நீகற் றிருந்தவெலா மெப்போது மியம்பி யென்னைப்
பின்றாத புலவர்குழுக் கண்ணெல்லா மழைத்தேகிப் பெருமை செய்வாய்
ஒன்றாலுங் குறையாத கவிராச சதாசிவநீ யூங்கிப் போது
சென்றாயென் னையுமினியா ரவ்வாறு சிறப்பிப்பார் செப்பு வாயே.

விளங்குபவ வற்சரங்கார்த் திகைமாதந் திதியெட்டு வெள்ளி நாளில்
களங்கமுறு மிரவுதிரி தியமிருக சீரிடநாள் கற்றோ ரெல்லாம்
உளங்கவலச் சதாசிவப்பேருற்றதமிழ்ப் பாவலவ னுடலம் விட்டுக்
களங்குலவு கண்டத்தெஞ் சதாசிவத்தோ டிரண்டறவே கலந்தான் மன்னோ.

——

௨

# பக்தி.

(திருநாவலூர் போர்டு ஆண்பாடசாலைத் தலைமையாசிரியர் திருவாளர். S. சந்தானகோபாலைய ரவர்கள்)

பக்தி, அன்பு, பிரியம், காதல், ஆசை, இச்சை, விசுவாசம் முதலியவைகள் ஒரு பொருளைக் குறிக்கும் பதங்கள். தெய்வம், குரு, பிதா, மாதா ஆகிய இவர்களிடத்தில் வைப்பது பக்தி.

பக்தியின்பெருமை யளவுகடந்தது. பக்தியாலேயே ஈசுவரன் அருளை பெறக்கூடும். பக்தி இல்லாவிடில் பிரம்மாநந்தம் ஏது? எத்தகைய தொழிலிலிருந்தாலும் மனம் பகவத் பக்தியிலேயே ஆழ்ந்திருக்கவேண்டும். அன்புருவாகிய பரசிவத்தைப் பக்தி செய்துதானடையக்கூடும். பக்திசெய்து முக்திபெற்றோர் பலராவர். ‘பக்தி செய்யடியரைப் பரம் பாத்துய்ப்பவன்’ என, இறைவரைப் போற்றுகின்றார் மணிவாசகர். ‘புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே வழுவாதிருக்க வரந்தர வேண்டும்.’ என்றார் திருநாவுக்கரசர்.

“புலையனு யிருந்தபோதிலும் சிவசிவ என்றிடில், அவனுடன் உண்ணுக உறைக” என, ஆரியவேதமும், ‘ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே’ என, தமிழ்வேதமும் கட்டளையிடுகின்றன.

ஆதலால் பக்தியுடையோனுக்கு அரியபொருளில்லை. மனதைப் பிறவேறுவகைகளில் செல்லாது தடுத்து, இறைவனிடத்தே செலுத்தி, அடிமையாகிய நாம் ஆண்டனைக்குத் தொண்டுசெய்ய வேண்டுவது கடமை யெனக்கொண்டு செய்வதே உத்தமபக்தி.

கடவுளை உபாசிப்பதில் இரண்டுவித முண்டு:—

1. ஸகுணவுபாஸனை. (இது கடவுளை உருவமாகப் பாவிப்பது)
2. நிர்குணவுபாஸனை (அருவமாகப் பாவிப்பது.)

அருவமாக வுபாசிப்பது, பக்தி முதிர்ந்து தன்னையறியும் பக்குவமுடையோர்க்கே சாத்தியம். ஆகலின் யாவரும் ஸகுணவுபாஸனையையே முதலாவதாகச் செய்யவேண்டும்.

ஜாக்கிரத்தில் மனம் எதைச் சிந்திக்கிறதோ அதையே கனவில் காண்கிறது. இதுயாவருக்கு மனுபவம். அவ்வாறு ஜாக்கிரத்தில் உபாஸனு மூர்த்தியைச் சிந்திக்கும் பலத்தால், சொர்ப்பனத்திலும் காண்போமாகில் நமக்குச் சரியான பக்தி ஜநித்திருக்கிறதென்பதற்கு அறிகுறி. ஈசுவரனை எப்பொழுது தரிசிப்போம் தரிசிப்போம் என்ற கவலைஎவ்வளவுக் கெவ்வளவு அதிகரிக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவுஈசுவர தரிசனம் கிடைக்கும். இதுவேபக்தி வழி.

பக்தியிலும் ஸத்துவம், இராஜஸ, தமஸ என்கிற குண வேற்றுமைகளுண்டு.

1. ஸத்துவ குணமுள்ளவர்கள்:—ஆடம்பரமின்றிக் காணப்படினும் அந்தரங்கத்தில் (மனத்தகத்தே) ஈசுவர சொரூபத்தை ஆழநிறுத்தி சிவபோதந் திளைத்திருப்பர்.

2. இரஜோகுண முள்ளவர்கள்:—மதச்சின்னங்களைப் பொற்கட்டுகள், நவரத்தினங்களாதிய பொருத்திப்புனைந்து பக்திசெய்வாராயினும் தற்போத முனைத்திருப்பர்.

3. தமோகுண பக்தி யுள்ளவர்கள் மதுமாமிசங்களை நிவேதித்து, பலிசெலுத்திப் பாவத்தை மூட்டைகட்டி மீளா நரகவாதனைக் காளாவர்.

ஈசுவரனே விருப்பு வெறுப்பு அற்றவர். அவருக்கு நம்மால் ஆகவேண்டியது ஒன்றுமே யில்லை. ஆயினும் நாம் கொண்டுவந்து குழந்தையினிடம் கொடுக்கும் தின்பண்டத்தில் சிறிது அக்குழந்தை நமக்குக் கொடுத்தால், நாம் அதை அளவுகடந்த ஆனந்தத்தோடு கொள்வதுபோலவே, ஈசுவரனும் நாம்அன்போடுசெய்யும் உபசாரங்களை யேற்றுக் கொள்கிறார்.

பக்திமார்க்கத்தை அனுஷ்டிக்கிறவரையில் தன்மை, முன்னிலை இரண்டும் உண்டு. ஈசுவரன் உபாசிக்கப்படுகிறவராயும் ஜீவன் உபாசிக்கிறவனாயு மிருக்கிறான். இது துவித நிலை. பிறகே முடிவான அத்துவித ஞானத்தையடைய வேண்டும். பக்தி முதிர்ந்தபொழுது உபாசிப்பவன் சொரூபம் அன்புருவமடைகிறது. அப்பொழுது நான் என்ற உணர்ச்சிஅடியோடு நழுவ, முன்னிலையிலிருந்தசொரூபமும் நழுவிவிடுகிறது. பிறகு தன்மையும் முன்னிலையும் அற்று ஆனந்த மயமான ஒரே அகண்ட சொரூபமாய் யாவும் விளங்கும்.

யோகமார்க்கமாய் முக்தி பெறுவதைக் காட்டிலும், பக்திமார்க்கமாய் முக்திபெறுவது மிகவும் இலேசானது.

கடவுட் பக்தியே சமயப்பற்றாகும். சமயம் என்பது கடவுளையறியும் மார்க்கம். 'அறிவை அறிவது பொருளாமே' என்று அருணகிரிநாதர் அருளியிருக்கின்றார். ஈசுவரன், அறிவுக்கு அறிவாயிருப்பவன்.

கடவுள் ஒருவரே; அவரையறிய ஏற்பட்டிருக்கும் மார்க்கங்கள் பல என்பது யாவர்க்கும் உடன்பாடே. சிறுபிராயத்தில் கல்வி கற்கத் தொடங்கும் போதே 'ஓம் நமசிவாய' என்றும், 'ஹரிஓம்' என்றும் கூறி குருவை சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்துகொள்ளும் முறைமையை நம் முன்னோர்கள் ஏற்படுத்தியது கொண்டே அவர்களது பக்தியின் பெருமைபாராட்டற்பாலது.

———

உ

கணபதி துணை.

# பழமலைக்கோவை

## முகவுரை.

திருச்சிற்றம்பலம்.

கருமணியைக் கனகத்தின் குன்றொப் பானைக்
கருதுவார்க் காற்ற வெளியான் றன்னைக்
குருமணியைக் கோளரவ மாட்டு வானைக்
கொல்வேங்கை யதளானைக் கோவணவன் றன்னை
அருமணியை யடைந்தவர்கட் கமுதொப் பானை
ஆனஞ்சு மாடியைநா னபயம் புக்க
திருமணியைத் திருமுதுகுன் றுடையான் றன்னைத்
தீவினையே னறியாதே திகைத்தவாறே.

(திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்.)

திருச்சிற்றம்பலம்.

### 1. கோவைகளின் இயல்பு.

கோவை யென்பது அகத்திணைக்குரிய துறைகளுக்கு இலக்கியமாக ஒரு வரலாற்றுமுறை அமைய நானூற்றின் மிக்க கலித்துறைகள் கோக்கப்பெற்ற தமிழ்ப் பிரபந்தமாகும்; ஐந்திணைக்கோவை யெனவும் இதுவழங்கப்படும். திருவாதவூரடிகளால் இயற்றப்பெற்ற திருச்சிற்றம்பலக் கோவையாரும் இறையனாரகப்பொருளில் மேற்கோளாகக் காட்டப்பெற்ற பாண்டிக்கோவையும் பழையகோவைகளாகும். யாப்பருங்கலவிருத்தியுரையாசிரியராற் கூறப்படும் குமரசேனாசிரியர் கோவையும், தண்டியலங்கார வுரையாசிரியரால் சுட்டப்படும் தமிழ்முத்தரையர் கோவையும், ஒட்டக்கூத்தர் இயற்றிய காங்கேயன் நாலாயிரக்கோவையும், அம்பிகாபதி கோவையும் பழமையுடையனவென்றே தெரிகின்றன. பிற்காலத்துக் கோவைகள் பெரும்பாலும் தஞ்சைவாணன் கோவையைப் பின்பற்றி இயற்றப்பட்டவைகளாகும்.

கோவைகள், வழிபடு தெய்வத்தையேனும் ஆதரித்தவர்களையேனும் பாட்டுடைத்தலைவர்களாக அமைத்துப் புலவர்களாற் பாடப்பெறுவன; "யாவையும் பாடிக் கோவைபாடு" என்றுள்ளபழமொழியினால் ஏனைப்பிரபந்தங்களை இயற்றி நாப்பழக்கம் தேர்ந்தபுல

வர்களே இவற்றைப்பாடும் தகுதி யுடையவர்களென்பது பெறப்படும். இவற்றைச் சிறுகாப்பியங்களோடு சேர்த்துக்கூறுவர் தண்டியலங்கார வுரையாசிரியர். எழுத்துச் சொற்பொருள் யாப்பு அணி என்னும் ஐவகை இலக்கணங்களும் நன்கு அமைவதற் கேற்றவண்ணம் இப்பிரபந்தங்கள் விளங்குகின்றன. சிவஞானச்செல்வராகவும் அழுதடியடைந்த அன்பராகவும் விளங்கிய மணிவாசகப் பெருமானே அழகிய திருச்சிற்றம்பல முடையாரது புகழ்வகையை அமைத்தற்கு இடமாக இத்தகைய பிரபந்தத்தைக் கைக்கொண்டாரென்பதும் சிவபிரானே அதனைத் தம் திருக்கரத்தால் எழுதினாரென்பதும் இந்தப் பிரபந்தங்களின் பெருமையை விளக்கும்.

## நூல்.

பழமலைக்கோவையென்னும் இந்நூலானது பழமலையிற் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள பழமலைநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றது; துறைமங்கலத்தில் இருந்த சாமிநாதைய தேசிகரென்னும் வீரசைவக்கவிஞரொருவரால் இயற்றப் பெற்றது; 427 செய்யுட்களை உடையது.

## 2. பழமலையின் பெருமை.

பழமலையென்பது நடுநாட்டில் ஸ்ரீமணிமுத்தா நதிக்கரையில் உள்ளதொரு சிவஸ்தலமாகும்; சிவஸ்தலங்கள் ஆயிரத்தெட்டில் தலைமையான நான்கினுள் இத்தலம் * ஒன்றாகும். இது விருத்தாசலம், விருத்தகாசி, சிரகிரி, முதுகுன்று, குன்றை முதலிய திருநாமங்களால் வழங்கப்பெறும். இது பலபுராணங்களாலும், இதிகாசங்களாலும், வேறு பலநூல்களாலும் பலபடியாகப் பாராட்டப் பெற்றுள்ளது. இம்மலை சிவபெருமான் திருவுருவென்றும், திருமணிமுத்தாறு சத்தியுருவென்றும் இத்தலபுராணம் கூறும். †சிதம்பரம் சிவபிரான் திருநடனத்துக்குரிய தலமென்றும் இது குலாவி வீற்றிருத்தற்குரியதென்றும் கூறப்படும்.

இத்தஸ்தலத்தில் மரிக்குமுயிர்களை மரணசமயத்தில் உமாதேவியார் தம்மடியில் வைத்து முன்தானையால் விசிறுவாரென்பதும் சிவபெருமான் அவ்வுயிர்களின் வலக்காதில் பஞ்சாட்சர உபதேசம் செய்தருளுவாரென்பதும் பல நூல்களிற் காணப்படுகின்றன.

* ஏனைமூன்று தலங்கள், காசி, சிதம்பரம், காளத்தி யென்பன.
† சீகாளத்தியுலா, 47-50.



"தூசினா லம்மை வீசத் துடையின்மேற் கிடத்தித் துஞ்சும்
ஆசிலா உயிர்கட் கெல்லா மஞ்செழுத் தியல்பு கூறி
ஈசனே தனது கோல மீந்திடு மியல்பா லந்தக்
காசியின் விழுமி தான முதுகுன்ற வரையும் கண்டான்"

என்பது கந்தபுராணம்.

மகாப்பிரளய காலத்திலும் இந்தத்தலம் அழியாமல் மேலோங்கி நிற்பது;

"பாடு வாருக் கருளு மெந்தை பனிமுது பௌவமுந்நீர்
நீடு பாரு முழுது மோடி யண்டர் நிலைகெடலும்
நாடு தானு மூடு மோடி ஞாலமு நான்முகனும்
ஊடு காண மூடும் வெள்ளத் துயர்ந்தது முதுகுன்றே"

"........செழு நிலத்தை மூடவந்த மூவாத முழங்கொலிநீர்
கீழ்தாழ மேலுயர்ந்த முதுகுன்றமே"

"ஓவா வுவரி கொள்ள வுயர்ந்தா யென்றேத்தி
மூவா முனிவர் வணங்கும் கோயில் முதுகுன்றே" (திருஞா. தே.)

என்னும் திருவாக்குக்களாலும்,

"பழமலை பகரிற் பாய்புனல் யாண்டும்
பரந்தொரு பற்றிலா துலகம்
முழுவதும் கரக்கப் பெறுபிரளயத்தின்
முகட்டினின் முடிவிலா திருக்கும்"
(திருக்காளத்திப்புராணம், தல விசிட்டமுணர்த்திய. 47)

என்பதனாலும் இது விளங்கும்.

இங்கே அகத்தியர் முதலிய முனிவர்களும், பிரமன் திருமால் முதலியவர்களும், வேறு பலரும் பூசித்துப்பேறு பெற்றனர்.

## மணிமுத்தாநதி.

மணிமுத்தாநதி இத்தலத்தை வழிபடுங் குறிப்பாக வலஞ்செய்தோடுகின்றதென்பர்;

"முழங்கொலிநீர் முத்தாறு வலஞ் செய்யு
முதுகுன்றத் திறையை" (திருஞா. தே.)

"முத்தி முத்தாறு வலஞ்செயு முதுகுன்றரை" (சுந்தா. தே.)

என்பவற்றில் இது குறிப்பிக்கப் பட்டிருத்தல்காண்க. அந்நதி கங்கையிற் சிறந்ததாகக் கருதப்பட்டு இறந்தாரென்பு இடப்படுதலின் அத்தி முத்தாறென்றும், தன்பால் மூழ்கினவருக்கு முத்தியை வழங்குதலின் முத்தி முத்தாறென்றும் வழங்கப்பெறும்.

## மூர்த்திவிசேடம் முதலியன.

இங்கே எழுந்தருளியுள்ள விநாயகரது திருநாமம் பாதாள விநாயகரென்பது; அது தமிழில் ஆழத்துப்பிள்ளையாரெனவழங்கும். சிவபிரான் திருநாமம் விருத்தாசலேசர், பழமலைநாதர் முதலியன; அம்பிகையின் திருநாமம் விருத்தாம்பிகை, பெரியநாயகி முதலியனவாம்.

இந்த ஸ்தலத்துக்குரிய விருட்சம் வன்னி.

இதனைச் சார்ந்ததாகக் கோபுரப்பதம் என்னும் ஒரு சிறந்த சிவஸ்தலமுண்டு. அத்தலமும் இந்த ஸ்தலபுராணத்தாலும் வேறு பல நூல்களாலும் இத்தலத்துடன் சேர்த்தே சிறப்பிக்கப்படுவது. மகாநந்திபாராயண முனிவரென்னும் ஸித்தரொருவர் இருந்து சசிவர்ணனென்னும் மாபாவி யொருவனைத் தடுத்தாட்கொண்டு ஞானோபதேசம் செய்தற்கு இடமாகிப் பெருமைபெற்றது அது.

பழமலையைத் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் முதலிய மூவரும் பாடியுள்ளார்கள். ஸ்ரீ ஞானக்கூத்தரென்னும் பெரியாரால் தமிழில் இயற்றப்பட்டபுராணம் ஒன்று இதற்குஉண்டு. கவிஞர் பெருமானாகிய துறைமங்கலம் சிவப்பிரகாச ஸ்வாமிகளால் இயற்றப்பெற்ற பழமலை யந்தாதி, பிக்ஷாடன நவமணிமாலை, பெரியநாயகியம்மை விருத்தம், பெரியநாயகியம்மை கலித்துறையென்பனவும், குமார தேவரால் இயற்றப்பெற்ற பெரியநாயகி யம்மைபதிகம் என்பதும், குரு நமச்சிவாயரா லியற்றப்பெற்ற சில வெண்பாக்களும், வேறு ஒரு கவிஞரால் இயற்றப்பட்ட பழமலை வெண்பாவென்னுமொருநூலும், பிறவும்இத்தலசம்பந்தமானவை. கந்தபுராணம், சூதசங்கிதை, சிதம்பரபுராணம், திருக்காளத்திப்புராணம், திருக்காளத்திநாதருலா முதலிய பல தமிழ்நூல்களில் இத்தலத்தின்பெருமைகூறப்படுகின்றது. இத்தலத்துமுருகக்கடவுள் விஷயமாகஅருணகிரிநாதரால் இயற்றப்பெற்ற திருப்புகழ்கள்சிலஉண்டு.

## 3. நூலாசிரியர்.

இப்பழமலைக்கோவையின் ஆசிரியராகிய சாமிநாதைய தேசிகரென்பவர் துறைமங்கலம் கருணைச் சிவப்பிரகாசரென்பவருடைய குமாரர். இந்நூல் அவரால் இயற்றப்பெற்று அரங்கேற்றியகாலம் சாலிவாகன சகாப்தம் ௧௬௮௨ (கி. பி. 1759) என்று இந்நூல் எழுதிய ஏட்டுச் சுவடியிலுள்ள குறிப்பொன்றினால் தெரிகின்றது.



எனவே இந்நூலாசிரியருடையகாலம் இற்றைக்குஏறக்குறைய 180 வருஷங்களுக்கு முன்பென்று புலப்படுகின்றது.

இந்நூலின் நடை முதலியவற்றைப் பார்க்கையில் இதனைத்தம் இளமையில் இவர் இயற்றியிருக்க வேண்டுமெனத் தோற்றுகிறது; ஆயினும் தலசம்பந்தமான வரலாறுகளையும், தாம் கற்றும் கேட்டும் அறிந்தபல செய்திகளையும் ஆங்கங்கே அமைத்திருக்கின்றார்.

## ௪. நூலாராய்ச்சி.

### க. மூர்த்தி.

இவர் முதலில், 'பாதாளத்தைங்கரனை' வாழ்த்தி இந்நூலைத் தொடங்குகின்றார். சிவபெருமான் பெருமைகளையும் பழமலையின் சிறப்பையும் அமைத்துச்செல்கின்றார். பழமலைவாணர், முதுகுன்றர், விருத்தாசலத்தர் (67) முதலிய சிவபெருமான் திருநாமங்களும் பெரியநாயகி யம்மையின் திருநாமமும் (1, 36, 151, 254) இடையிடையே எடுத்தாளப் படுகின்றன. அவ்வம்மையைப் பெண்ணறுக் கருங்கலமாம் பெரியம்மை, பெண்ணுக்கரசியென்பர்.

### உ. தலம்.

திருமுதுகுன்றம்மிகப்பழமையானதலமென்பதை, "முன்மேலெழுந்த முதுகிரி" (82), "வேதன் படைத்த மலைகட் கிறைபெனவீழ்சடைநம், காதன் படைத்த முதுகிரி" (86) என்பவற்றாலும், பலபுலவர்களாற் பாராட்டப்படுவதென்பதை, "இசையார் பெருவளஞ் சூழ்முது குன்றர்" (55), "கற்றோர் பரவு முதுகுன்றர்" (96, 334), "சொன்மாலை வேய்ந்த திருமுது குன்றர்" (142), "பாடிப் புலவர் தொழுமுது குன்றர்" (145) என்பவற்றாலும், இத்தலத்தில் இறத்தலால் நற்கதி கிடைக்குமென்பதை, "செத்தார் பிறவாத்திருமுது குன்றர்" (70), * "மரியாதிருந்திட வேண்டிய பேர்கண் மரித்தனரேற், பரியாதுடலருள் சீர்முது குன்றர்" (381) என்பவற்றாலும், கைலையினும் சிறந்ததென்பதை "வெள்ளிக்கிரியை வெறுத்த முதுகுன்றர்" (403) என்பதனாலும் மாசிமகத்தில் விழாவுண் டென்பதை, "முதுகுன் றுறு கண்ணுதலோன் மாசிமகம்" (402) என்பதனாலும் புலப்படுத்தியிருக்கின்றார்.

---

* "பழவெற்பினயல், சூழமரிக்கு மியல்பையெஞ் ஞான்றுந் துணிந்திலையே" (பழமலையந்தாதி, 17) என்றார் சிவப்பிரகாசரும்.

"காசி சுடலை யெனமுது குன்றுறு கண்ணுதலோன்" (402) என இது காசியினும் மிக்கதென்பதைக் குறிப்பிக்கிறார். ஸ்ரீசிவப்பிரகாச சுவாமிகள் பழமலையந்தாதியில் இக்கருத்தை,

"மாசி யதிகந் துறந்தார் மகிழ்குன்றை மாநகரோ
காசி யதிகங் கொலோவென்பி ராயினக் காசியெனப்
பேசி யதிகந் தகன்றிருந் தான்பரன் பேரடலை
பூசி யதிகம் பரனீங்கி லானிப் புரியினையே"

என விளக்கியுள்ளார்.

இத்தலத்தில் தேவர்களின் பொருட்டு இறைவர் ஒருமுறை திருநடனம் செய்தருளியதை, "பொதுவினடம்புரி நம்முது குன்றர்" (393) என உய்த்துணர வைத்துள்ளார். விருத்தாசலபுராணம்,

"வித்தக மாகிய சித்தர்கண் மெத்திய மெய்யென்னைச்
சித்திர மான திருப்பதமெண்டிசை யுந்தோன்றச்
சத்தி முகத்தும் பத்தர் முகத்துந் தன்கண்ணை
முத்த நதிக்கணி ருத்த மளித்தான் முதுகுன்றன்"

(நிருத்தச் சருக்கம், 12)

என்று கூறும்.

பின்னும் இங்குள்ள திருக்கோயிற் கோபுரம், "வான்றோட்ட கோபுரம்" (240) என்றும், திருமதில், "சேணைப் பொருந்து மதில்" (255), "மாகத் தளவு மதில்" (374), "புங்கம் பொருந்து மதில்" (380), "சுதை யுற்றெழுந்த மதில்" (391) என்றும், மாடவீதி, "காரும் மதியுந் தவழ்மாட வீதி" (61) என்றும் சிறப்பிக்கப்படுகின்றன. இவை,

"மாட மதிலணி கோபுரமணி மண்டபம்
மூடி முகிறவழ் சோலை சூழ்முது குன்றரே" (சுந்தர. தே.)

என்னும் திருவாக்கை நினைப்பிக்கின்றன.

### ௩. தீர்த்தம்.

இத்தலத்திலுள்ள தீர்த்தங்களுள் திருமணி முத்தா நதியை இவ்வாசிரியர், "முத்தாறு சூழுமுதுகிரி"(14), "கொழிக்குந் தரள முத்தாறுடையார்" (32), "மணிமுத்த யாநதி சூழ்முது குன்றர்" (98), "மணிமுத்தவாறும்" (157), "திருமுதுகுன்றிற் பரவுறுநன் மணிமுத்த மாநதி" (337) என்னும் இடங்களிற் பாராட்டியுள்ளார்; இவற்றுள் 'கொழிக்குந் தரள முத்தாறு' என்பது,



"முத்தாறு வெதிருதிரு நித்திலம்வா ரிக்கொழிக்கு முதுகுன்றமே"

(திருஞா. தே.)

என்னுந்திருவாக்கை உட்கொண்டு அமைக்கப்பட்டதென்று தோற்றுகிறது. அந்நதியிலுள்ள புண்ணிய மடுவென்னுந்துறை "காமடுச் சூழுந் திருமுது குன்றர்" (390) என்பதிலும், பிறதடாகங்கள், "பங்கே ருகத்தடஞ் சூழ்முது குன்றர்" (34), "பைங் குவளைத் தடஞ் சூழ்முது குன்றர்" (64), "சங்காழ் புனற்றடஞ் சூழ்முது குன்றர்" (112), "தடமார் முதுகுன்றர்" (243), "வாளை குதிக்குந் தடமுது குன்றர்" (262), "அன்னஞ் செறிதடஞ் சூழ்முது குன்றர்" (263), "அனம் பூங்கமலந் துன்னேர்த் தடமுதுகுன்றர்" (293), "வாளைத் தடஞ்சீர் பெறுமுது குன்றர்" (301), "குருகின் விளங்கிய பூந்தடஞ் சூழ்முது குன்றர்" (342), "செங்காவி நீர்த் தடஞ் சூழ்முதுகுன்றர்" (369), "பூமேவிய தடஞ்சூழ்முது குன்றர்" (419) என்பவற்றிலும் கூறப்படுகின்றன.

### ௪. வழிபட்டுப் பேறுபெற்றோர்.

இத்தலத்தில் வழிபட்டுப் பேறுபெற்றோர்களுள் அகத்தியர், "முன்னீர் குடிக்குமுனிதாழ்பழமலை முத்தர்" (17), "விந்தமடக்கு முனிதாழ் முதுகுன்றர்" (191), "பண்டார் குறுமுனி தாழ்முது குன்றர்" (278), "கடலைக்குடித்த முனிதாழ் முதுகுன்றர்" (404) என்பவற்றிலும், திருமால் "விண்டுவந்தேத்தும் பழமலை வாணர்" (43), "அலையி லிருந்தவன் தாழ்முதுகுன்றர்" (197), "கண்ணன் பரவுந் திருமுது குன்றர்" (400) என்பவற்றிலும், பிரமதேவர், "விரைசேர் மலரவன் போற்றும் பழமலை மெய்யர்" (48), "விதியும் பணியுந் திருமுது குன்றர்" (93), "முன்னை யயற்கருள் செய்முது குன்றர்" (147), "நச்சிப்பணியும் விதிமுது குன்றர்" (200), "அனத்தற் கருள் சிவனார் முதுகுன்று" (264), "அஞ்சத்தவன் பணி மாமுது குன்றர்" (327) என்பவற்றிலும், இருவரும் (அயனரி), "இருவர் வழுத்து முதுகுன்றர்" (52), "இருவர்க்கருளு மொருமுதுகுன்றர்" (297) என்பவற்றிலும், இந்திரன், "பன்னாட் டத்திந்திரன் சூழ்முது குன்றர்" (166) என்பதிலும், சூரியன் "இனன்றாழ் முதுகுன்று" (302) என்பதிலும், வாணாசுரன், "வாணற் கருள்புரி முதுகுன்றர்" (158) என்பதிலும், சசிவன்னன் "முன்னோர் சசிவன்னன் றாழ்முது குன்றர்" (216) என்பதிலும்,

பதஞ்சலி, "அரவு பணிமுது குன்றப்" (322) என்பதிலும் சொல்லப்பட்டுள்ளார்கள். இந்தத் தலத்திற்குரிய புராணத்தால் இவருட் சிலர்வழிபட்ட வரலாறுகளே பெறப்படுகின்றன; ஆயினும்,

"நெடியா னான்முகனு மிரவியொடு மிந்திரனும்
முடியால் வந்திறைஞ்ச முதுகுன்ற மமர்ந்தவனே"
(சுந்தர. தே.)

என்னும் தேவாரத்தாலும் பிறவற்றாலும் பலர் வழிபட்ட செய்திகளை அறியலாம். உமாதேவியாருக்கு ஒரு சமயம் பழமலைநாதர் அருள்கூர்ந்த செய்தி, "தேவிக்கருளுந் திருமுது குன்றர்" (304) என்பதனாற் பெறப்படுகிறது. சுந்தரமூர்த்தி நாயனார் தாம் பெற்ற பொன்னை மணிமுத்தாநதியில் இட்டுத் திருவாரூர்க் கமலாலயத்திலே பெறும்படி சிவபெருமான் அருள்செய்த அரியவரலாறு "ஆற்றில்விடுத்த பொருள் குளத்தேயுற வன்று நம்பி, வீற்றிலிருக்க வருண்முதுகுன்றர்" (35) என்று பாராட்டப்பெறுகிறது. இத்தலம் பலவகைச் சிறப்புடையதாக விளங்குதலின் இங்கே முனிவர் பலர் இடையறாது தவம்புரிந்தும் பழமலைநாதரை வழிபட்டும் வாழ்த்தியும் வந்தனரென்பது,

"நாரானபன் முனிவர்தொழ விருந்தானிடம்"
"முறைபான் மிகு முனிவர்தொழு முதுகுன்று"
"மூவாதபன் முனிவர் தொழு முதுகுன்று"
"ஞானிகளா யுள்ளார்க ணான்மறையை முழுதுணர்ந்தைம்
புலன்கள் செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
தவம்புரியு முதுகுன்றமே"
"முறையான் முனிவர் வணங்குங் கோயின்முதுகுன்று"

என்னும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவாக்குக்களாலும்,

"இளைக்குறு தவத்தோர் தரித்துறை விருத்த
கிரியமர் பெரியநா யகியே"
"சேதமி றவத்தோர் சூழ்தரும் விருத்த
கிரியமர் பெரியநா யகியே" (பெரியநாகி யம்மை பதிகம்)

என்னும் குமாரதேவர் திருவாக்குக்களாலும்,

"வழுவிந்து வினைப்பகை சாய்தரவும்
மாயைக்கலை யாவழி யெய்திடவும்



சழுவுங்கரு மாமல மற்றிடவும்
தற்போதமறச் சிற்போதமிகுந்
தொழுகும்படி யும்பெறி னிங்கிதுபோல்
உளதோவிலை யென்றுயர் மாமறைநூல்
முழுதுந்தெரி மாதவர் தாமகலா
முதுகுன்றமு நம்பதி யென்றுணரே"
(திருச்சிற்றம்பலச் சருக்கம், 79)

என்னும் சிதம்பரபுராணச் செய்யுளாலும் புலப்படுகின்றது. இவற்றைநினைந்த இந்நூலாசிரியரும், "அறவர் வழுத்துந் திருமுதுகுன்றர்" (83) என்றும், "செறிமா தவர்வாழ் திருமுதுகுன்றர்" (91) என்றும், "முனிவோர் பரவுந் திருமுது குன்றினர்" (144) என்றும், "துறவிக் குலங்க டொழுமுது குன்றர்" (172) என்றும் பாராட்டுகின்றார்.

பழமலைநாதரை, "புலனவியாத துரிசினர்க்கும், பிறவி யொழிக்குந் திருமுது குன்றர்" (161), "கலர்கண்டு முத்தி பெறுமுது குன்றர்" (193), "கலர்கூறினுஞ்சுத்த மாக்கு முதுகுன்றர்" (326) என்று கூறுவதால் அவருடைய பெருங்கருணைத் திறத்தைப் புலப்படுத்துகிறார்.

உவமைகளாவும் பிறவாறாகவும் இந்நூலாசிரியர் அங்கங்கே அமைத்துள்ள மக்கள் இயல்புகளும், பொருள்களின் இயல்புகளும், உலகவழக்கங்களும், நீதிகளும், பழையவரலாறுகளும் பல.

## ௫. பெரியோர் முதலியவர்கள் இயல்பு.

'பெரியோர் மொழிகள் வழுவிலர்' (27), 'அறிவிற் பெரியர் மொழிபிறழார்' (290), 'ஏரார் பெரியரைக் காணின் இகத்தினும் இன்பமுண்டு' (398), 'பெரியோர் சிறியோரிடம் வருதுவரோ' (406) என்பவற்றாற் பெரியோர் இயல்புகளையும், 'மன்னர்கள் அருளும் துயரும் ஆக்குதல்போல்' (5), 'வெங்கோலரசன் கொடுமையை வேறொரு செங்கோலரசனழிக்குந் திறம்போல்'(318) என்பவற்றில் மன்னர் செயல்களையும், 'சிறியார் சிறுபொருள் கண்டால் மகிழ்வினைச் சேர்ந்திடல்போல்' (268) எனச் சிறியோர் தன்மையினையும், 'உண்டுடுத் தீயார் பொருள்போன்றதென்றனுடலழகே' (215), 'உண்ணார் இறுகுப்படிக்கு முடிந்திடும் பொன்னென' (294) என உலோபிகள் இயல்பையும் எடுத்துக் கூறுகின்றார்.

'ஊழும் விலக்கப்படுமே முயற்சி யுறுபவர்க்கே' (19) என முயற்சியின் பெருமையையும், 'ஊழ்விதிவசம் புத்தி' (34 , 'நிதி மழை பெய்யினும் நல்வினையில்லார்க்கு நீங்குதல்போல்' (99), 'தம்மைத் தொடர்ந்த வினைப்பயன்' (213) எனஊழின் வன்மையையும், 'ஊழ் பொருத்தும் கடம்புயன்' (302) என அவ்வூழ் தலைவனையுந் தலைவியையும் ஒன்றுபடச் செய்ததென்பதையும் புலப்படுத்துகிறார். 'நெஞ்சுக்குரிய மெய்க்கல்வி' (42) எனக்கல்வியைப்பற்றி இவர் கூறுதல் 'வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்' (ஔவையார்) என்பதன் கருத்தை விளக்குகின்றது. 'பிறவிப்பயன்பெறக் கற்றிட' (410) என்பதனாற் கல்வியின் இன்றியமையாமையையும், 'கற்றார் பயன்பிறர் தீமையைநீக்கல்' (412) என்பதனாற் கல்விப்பயனையும், 'பொறுத்தேயிருந்திடுநாம் புகழ்பெற்றனம்' (407) என்பதுமுதலியவற்றால் பொறுமையாற் புகழுண்டாதலையும் உணர்த்துகின்றார்.

### ௬. பறவை தாவரங்களின் இயல்புகள்.

பறவைகள் சிறகிற் பெடையை அணைந்து இன்புறுதல்(172), அசுணப்பறவை பறையொலியினால் வருந்தல் (224), காகத்தின் இருவிழிக்கும் ஒருமணி அமைந்திருத்தல் (244, 374), சகோரம் நிலவையுண்ணுதல் (295) முதலியபறவைகளின் இயல்புகளையும், தாமரை நீரின்றிப்படராமை (24), பயிர்கள் சந்திரனால் வளம்பெறுதல் (64), தாழை மின்னலைக்கண்டு பூத்தல் (114, 386), கள்ளிருளில் நொச்சிமலர் உதிர்தல் (200), மலர்க்கொடி தென்றலால் அலர்தல் (228), நெல்லுங்கரும்பும் நிலவளத்தைப் புலப்படுத்தல் (239), பலாசமரம் பங்குனிமாதத்தில் மலர்தல் (384) முதலிய தாவரங்களின் இயல்புகளையும் இந்நூலில் அங்கங்கே காணலாம்.

### ௭. உலகவழக்கச் செயல்கள்.

தாம்புக் கயிற்றின் உதவியால் கூவல் நீரைக்கொள்ளுதல் (69), பத்திரங்கொண்டு அருச்சித்தல்(286), மணியைப் பொன்னிற் பதித்தல் (305), தேனிறாலைத்தீக் கொளுத்தி யெடுத்தல் (366), கிணற்றில் விழுந்தபொருளை எடுப்பவர் முதலில் நீர்நிலைபார்த்தல் முதலிய உலகவழக்கச் செயல்களை இந்நூலாசிரியர் உவமை முதலியவைகளாகச் சார்த்தி அறிவிக்கின்றார்.

### ௮. பழமொழிகளும் உலகவழக்குக்களும்.

இலவுகாத்தகிளி (89), இலைமறைகாய் (197), பாவிற் குழலுங்



குழல் (250), காற்றைப் பிடித்துக் கரகத்தடைத்ததை (258), ஊர் வாயைமூட உலைமூடியுண்டோ (313) என்னும் பழமொழிகளை எடுத்தாள்கின்றார். உலகவழக்குத் தொடர்மொழிகளையமைத்து, வருந்துபவர்கள் 'நான் செய்ததீவினை' (198) என்றுநொந்துகொள்ளுதலையும், ஒருவருக்காக ஒருகாரியம் செய்பவர்கள் 'நின் முகத்துக்காகச் செய்தேன்' (366) என்று சொல்லுதலையும், ஒருத்திபுகழுடன் வாழ்தல் 'யாருடையமனைவி' (375) என்று யாரும் கூறுவதாற் புலப்படுதலையும், இரக்கமுள்ளவரென்பதைக் குறிப்பிக்க 'பெண்ணோடுபிறந்தவர்" (418) என்று சொல்லுதலையும் இதன்கட் காணலாம்.

### ௯. உவமைகள்.

தலைவன் முதலியோர் தங்கள்கருத்தை உவமை வாயிலாக உணர்த்தும் முறையில் பலவகை உவமைகள் காட்டப்படுகின்றன. அவற்றுட் சிலவருமாறு:—

தலைவன் தான் தலைவியினாற் பெற்ற இன்பத்தைப் பிறர் அறியாரென்பதை 'உண்டவர்க்கன்றி உணவின்பந்தெரியாது' என்னும் உவமையாற் புலப்படுத்துகிறான் (43); பாங்கன் தன்னை இடித்துக் கூறியதைக் கேட்டு வருந்தியதலைவன் பாங்கன்செயலை, 'பிணியுற்ற நீள்துயருற்றோர்க்கு வேறோர் பிணி தருதல்' லுடன் ஒப்பிடுகின்றான் (45); அவன் பாங்கி நகைத்துத் தன்னைப் புறக்கணித்தபோது அவள்செயலை, 'நோயுற்ற மெய்யினர்க்கு அந்நோய் மிகவுற நொக்குதலைப்' போன்றதென்கின்றான் (113); தலைவியின் மெலிவுகண்ட தாய் வெறியாட்டுத் தொடங்கியதைத் தோழி, 'இச்செயல் கையில் ஒருநோய் இருக்க அதனை அறியாமல் நன்றாக இருக்கின்ற காலை முடமென்று சொல்லிக்கட்டுக்கட்டுதல் போல இருக்கிறது' என்று சொல்லுகின்றாள் (230); தன்னோடு இன்புற்றிருக்கும் தலைவியைப் பிரிந்து பொருளுக்காகச் செல்லும் தலைவனைப் பார்த்துத் தோழி, 'நின் செயல்சீர்மலி செல்வத்திடை கலிசேர்த்திடு செய்தியைப்போன்றது' எனக்கூறுகின்றாள் (210); தலைவி தன்னைப்பிரிய அதனால் வருந்திய தாய் சிந்தாமணி பெற்று இழந்தவரைத் தனக்கு உவமை கூறிக்கொள்கின்றாள் (331.).

### ௧௦. பழைய வரலாறுகள்.

இதிகாச புராண வரலாறுகள் சில இதில் வந்துள்ளன: இராமர் பொய்மானைத் தொடர்ந்துசென்றது(78), அருச்சுனன் பிடித்த

வில் புகழ்பெற்றதென்பது (367), தமயந்தி நளனுக்கு மாலையிட்டது (377), அவள் அவனுடன் காட்டிற்குச் சென்றது (328), வள்ளிநாயகியாருக்கு நீழல் செய்ய முருகக்கடவுள் வேங்கைமரமாக நின்றது (231), வள்ளிநாயகியார் முருகக்கடவுளோடு சென்றது(330), அவரைத் தெய்வயானை யம்மையார் வெறுமல் மகிழ்ந்தேற்றுக் கொண்டது (403) முதலியவற்றை இதனுட் காணலாம்.

பெரியபுராணத்திலுள்ள வரலாறுகளுள், "அறவர் வழுத்துந் திருமுதுகுன்றி னமரிறைவர், குறவர்குடித்த புனலமுதாகக் குளிர் சடைமேற், றுறவர் வழுத்த அடைத்தனர்" (83) எனக் கண்ணப்ப நாயனார் இறைவரது திருமுடியில் தம் வாயிற் கொணர்ந்த நீரால் அபிடேகம் செய்ததும், "வனத்தன்பில் வேடரைப்போற் சுந்தரனை வழிமறித்துத் தனத்தன்பி னூற்கொள் பழமலையார்" (146) எனச் சிவபிரான் சுந்தரமூர்த்திநாயனாரை வழிமறித்துப் பொன் பறித்ததும், "மூறச்சிக்கை நம்பிகட்செய் முதுகுன்றர்" (314) என ஆவணவோலைகாட்டி அவரை ஆட்கொண்டதும், "பாட்டிற்குரிய வெழிற்சுந்தரற்குப் பரவையினைக், கூட்டியருளுந் திருமுதுகுன்றர்" (314) என அவருக்குப் பரவைநாய்ச்சியாரை மணஞ்செய்வித்ததும், "பரவைக்குச் சந்து செலுமுதுகுன்றர்" (416) என அவருக்காகப் பரவையிடந்தூது சென்றதுமாகிய செய்திகள் இதில் ஆட்சிபெற்றுள்ளன.

## கக. ஒப்புமை.

இந்நூலாசிரியர் பல பழைய நூல்களிற்கண்ட சொற்றொடர்களையும் அரிய கருத்துக்களையும் அங்கங்கே எடுத்து அமைத்திருக்கின்றனர்.

'ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்'

என்னுந் திருக்குறளைச் சுட்டி, 'ஊழைப்புறங்கருந் தாளென வள்ளுவரோதியதால்' (115) என்றும்,

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

என்பதை நினைந்து, 'பொறுப்பார் தமக்குப் புகழலவோ சொலும்' (387) என்றும்,



(போ - ரை.) எவ்விடத்துள்ள எத்திறப் பொருள்களும் ஆகாயம் போல உருவமில்லாததா யானதாகச் சிந்தனைசெய்யாதவன், காட்டிலுள்ள உலண்டுப்பூச்சியைப் போலப்பாசத்தால் கட்டுப்பட்டு இழிவான பிறப்பிறப்புக்களைப் பொருந்துவன் எ - று.

(க - ரை,) எவ்விடத்தும் ஞானவெளியாக அறியாதவன் பிறந்திறந்துழலுவன் என்பதாம்.

ஈற்றிலுள்ள ஏகாரம் அசை.

உலண்டென்னும் பூச்சியானது தன்வாயில் நின்றும் நூலிழைத்துக் கூடுகட்டி வெளியே போகமுடியாது அக்கூட்டில் கட்டுப் பட்டிறக்கும். அதுபோல, மக்கள், யான் எனது என்னும் சங்கற்பத்தால் கட்டுப்பட்டுப் பிறந்திறந்துழலுவர். ஆதலின், அங்ஙனம் கட்டுப்படாதிருத்தற் பொருட்டு எவற்றையும் ஞானவெளியாகக் காணவேண்டும். இக்கருத்துப் பற்றியே * "சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர்." என்றனர் ஸ்ரீஅருணந்தி சிவாசாரியர். (கஎ)

(அ - கை) பிறவி அனைத்தும் துன்பமே யெனக் கூறுகின்றார்.

18. யாவ ராயினு மெப்பிறப் பெய்தினும்
ஆவ தாவ தருந்துய ராதலால்
தீய துன்பஞ் செறுத்தற் பொருட்டந்தக்
தூய ஞானச் சுடரைத் தொடர்வரே.

(இ - ள்.) யாவர் ஆயினும் - எவர்களாயினும், எப்பிறப்பு எய்தினும் - எந்தப்பிறவியை அடையினும், ஆவது ஆவது அருந்துயர் ஆதலால் - உண்டாவதுஉண்டாவதுபொறுத்தற்கரிய துன்பமே ஆகையால், அந்ததீய துன்பம்செறுத்தல் பொருட்டு - அந்தக் கொடிய துன்பத்தை நீக்குதற்கு, தூயஞானச் சுடரை தொடர்வர் - (சீவன்முத்தர்கள்,) பரிசுத்தஞான சொரூபமாய் விளங்கும் சிவபரம்பொருளையே சார்ந்து நிற்பர் எ - று.

(போ - ரை.) எவர்களாயினும், எந்தப்பிறவியை அடையினும், உண்டாவது உண்டாவது பொறுத்தற்கரிய துன்பமே ஆகையால் அந்தக்கொடிய துன்பத்தை நீக்குதற்கு, சீவன் முத்தர்கள், பரிசுத்தஞான சொரூபமாய் விளங்கும் சிவபரம்பொருளையே சார்ந்து நிற்பர் எ - று.

(க - ரை) பிறவியால் உண்டாவது துன்பமே ஆகையால், சீவன்முத்தர், சிவனையே சார்ந்து நிற்பர் என்பதாம்.

யாவராயினும் என்றவிடத்து, உம்மை, சீவன் முத்தராயினும் என்பதுதோன்ற நிற்றலாலும், எப்பிறப்பெய்தினும் என்றவிடத்து, உம்மை, பிறப்பின் மேன்மையைக் குறித்தலாலும் இரண்டும் உயர்வு சிறப்பு.

* சிவஞானசித்தியார். கக-ம். ரு-ம். செ. உ.

ஆவது ஆவது என்னும் அடுக்கு துணிவு குறித்தது. † செய்யாமை செய்யாமை நன்று. என்பதுபோல.

சுடரை என்றவிடத்து பிறவற்றைவிலக்கும் பிரிநிலை யேகாரந் தொக்குநின்றது. ஈற்றிலுள்ள ஏகாரம் அசை.

சீவன்முத்தரென்பது தோன்றா எழுவாய். சீவன்முத்தியைப் பெற்றவருக்கும், தேகமிருத்தல் பற்றிப் பழையவாசனையால்விருத்தி புறத்து நிகழவரும். நிகழுங்காலத்து அது, ஈனவிருத்தி யின்றித் தூயவிருத்தியாயினும் அதனால் மேலான பிறவியுண்டாம். பிறவி என்பது யாதாயினும் துன்பம் பயக்குமே யன்றி இன்பம் பயவாது. ஆதலின், * "பரஞானத்தால் பரத்தைத்தரிசித்தோர் பரமேபார்த்திருப்பர் பதார்த்தங்கள்பாரார். சீவன் முத்தர்சிவமே கண்டிருப்பர்." என்னுந் திருவாக்கின்படி சிவமொன்றே தெரியக்கண்டு பிறப்பினை யெய்தாதிருக்கவேண்டு மென்பது இதனாற் கூறப்பட்ட பொருளாகும்.

இயல்பாகவே, மலசம்பந்த மில்லாத ஞான மென்பதுணர்த்த தூய ஞானம் என்றார். (௧அ)

(அ - கை.) சீவன்முத்தர், சரியை கிரியை யோகங்களை விட்டு ஞானத்தால் சிவனையே சிந்தித்துக்கொண்டிருப்பரெனக் கூறுகின்றார்.

19. கருமமுஞ் சரியையுங் கழறப் பட்டவவ்
வருமைசேர் ஞானத்தை யடைவ ராதலால்
இருமையி லியோகமு மெய்த லின்றியே
திருமலி பரம்பொரு டன்னைச் சிந்திப்பார்.

(இ - ள்.) கழறப்பட்ட - (சீவன்முத்தர்,) சொல்லப்பட்ட, சரியையும் - சரியையும், கருமமும் - கிரியையும், இருமையில்யோகமும் - உசுவாச நிசுவாசங்களை யடக்கும் யோகமும், எய்தல்இன்றி - செய்யாது, அவ்அருமை சேர் ஞானத்தை அடைவர் - அந்த அடைதற்கு அருமையான ஞானத்தையடைவர், ஆதலால் திருமலி பரம்பொருள் தன்னைச்சிந்திப்பர் - ஆகையால் செல்வம் நிறைந்த சிவபரம்பொருளைச் சிந்தனை செய்துகொண்டிருப்பர் எ - று.

(பொ - ரை.) சீவன்முத்தர், சொல்லப்பட்ட சரியையும் கிரியையும் உசுவாச நிசுவாசங்களை யடக்கும் யோகமுஞ் செய்யாது, அந்த அடைதற்கருமையான ஞானத்தையடைவர். ஆகையால் செல்வம் நிறைந்த சிவபரம் பொருளைச் சிந்தனை செய்துகொண்டிருப்பர் எ - று.

† திருக்குறள். வாய்மை. செ. எ.
* சிவஞானசித்தியார். ௧௧. சூ - ம் செ. உ.



(க - ரை.) சீவன்முத்தர், பிறவிக்கேதுவாகிய சரியைகிரியை யோகங்களைச் செய்யாது, ஞானத்தால் சிவனையே சிந்தித்துக்கொண்டிருப்பர் என்பதாம்.

அகரம் மேலேகூறப்பட்ட ஞானத்தைச் சுட்டிற்று. இன்றியே என்றவிடத்து ஏகாரம் அசை.

சரியை - சிவாலயத்தில் திருவலகிடுதல் முதலியன.
கிரியை - சிவபூசை முதலியன.
யோகம் - பிராணாயாமம் முதலியன.

இம்மூன்றின் விரிவை சிவஞானசித்தியார் அ - ம். சூ - ம். ௧௯, ௨0, ௨௧-வது செய்யுட்களாலும் அவற்றின் உரையாலுந் தெரிந்துகொள்க.

திரு - முற்றுணர்வு முதலிய எண்குணங்கள். இவை, முத்தரிடத்து சிவனைச் சார்ந்து நிற்றலால் விளங்கித்தோன்றும். சிவனிடத்து இயல்பாகவேநிறைந்திருக்கும். ஆதலின், திருமலிபரம்பொருளென்றனர். (௧௯)

(அ - கை.) போகப் பற்றுவிட்டவரே சீவன் முத்தரெனக்கூறுகின்றார்.

20. சத்தி பாதலந் தான்முத லீறதா
வைத்த வைய மெலாமசத் தாதலால்
மெய்த்த ஞானத்தி னாலிவை விட்டவர்
சுத்த மாகிய சூனிய வாதிகள்.

(இ - ள்.) சத்திமுதல் பாதலம் ஈறதா - சத்திதத்துவத்தி லிருக்கும் புவனம் முதல் பாதலம்முடிவாக, வைத்தவையம் எலாம் அசத்து ஆதலால் - உள்ள புவனங்களெல்லாம் நிலைபேறின்றி அழிவனவாதலின், மெய்த்த ஞானத்தினால் - நிலைபேறுடைய சிவஞானத்தால், இவை விட்டவர் - இவற்றின் பற்றை விட்டவர், சுத்தம் ஆகிய சூனியவாதிகள் - இயல்பாகவே மலமில்லாத சிவபரம்பொருளை அறிந்த முத்தராவர் எ - று.

(பொ - ரை.) சத்திதத்துவத்தி லிருக்கும் புவனம் முதல் பாதலம் முடிவாக உள்ள புவனங்களெல்லாம் நிலைபேறின்றி அழிவனவாதலின், நிலைபேறுடைய சிவஞானத்தால் இவற்றின் பற்றைவிட்டவர், இயல்பாகவே மலமில்லாத சிவபரம்பொருளை அறிந்த முத்தராவர் எ - று.

(க - ரை.) சிவஞானத்தால் போகப்பற்றை விட்டவரே, சிவனையறிந்தசீவன்முத்தராவர் என்பதாம். தான் - அசை.

நோயாலும் வறுமையாலும் மனவருத்தத்தாலும் விரதங்காத்தலானும் இவைபோல்வன பிறவாற்றாலும் ஒருவனுக்குப் போகப் பற்றுநீங்குதல் கூடும். இந்தப் பற்று நீக்கம் நிலைபெறாது நோய்முதலியவற்றின் நீக்கத்

186946

தில் விட்டபோகத்தைப் பற்றுதல் கூடுமாதலின், சிவஞானத்தால் போகப் பற்றை விடவேண்டுமென்று கூறினார். பாசஞான பசுஞானங்கட்குப் பற்றுக்கோடான பொருள்கள் அநித்தியமாதல்போல, அந்தஞானங்களும் அநித்தியமாம். சிவஞானத்திற்குப் பற்றுக்கோடான சிவம்நித்தியமாதல் போல சிவஞானமும் நித்தியமாதலின், மெய்த்தஞானமென்றார்.

இவையென்பது போகப் பற்றைக்குறித்தது.

சுத்தமென்பது இயல்பாகவே மலமில்லாமையைக் குறித்தது.

சூனியமென்பது சுட்டியறியப்படாமையைக் குறித்து சிவத்தின் மேல்நின்றது. (௨௦)

(அ - கை.) சித்தசலனமே போகப் பற்றுக்குக் காரணமெனக் கூறுகின்றார்.

21. மருவிய பொருண்மே லன்பாய் வானரம் போற்சரித்துத்
திரியுமச் சித்தந் தன்னைத் திருத்திச்சூ னியத்தேநின்றால்
மருவினோர் பிரிதலின்றி வானவ ரறிவுக் கெட்டாப்
பொருவிலா நித்தசுத்தப் பொருளினை யடைவரன்றே.

(இ - ள்.) மருவியபொருள்மேல் அன்பாய் - சார்ந்தபொருளி னிடத்துப் பற்றுவைத்து, வானரம்போல்(சித்தம்) சரித்து திரியும் - குரங்குபோல் மனம் ஒன்றைவிட்டொன்றைப் பற்றிஅலைந்துதிரியும், அச் சித்தம்தன்னை திருத்தி - அந்தமனத்தைப் பொருள்களினிடத்துச் செல்லவொட்டாது தடுத்து, சூனியத்தே நின்றால் - சிவபரம் பொருளைப் பற்றிநிற்பராயின், மருவினோர் - அங்ஙனம் நிற்பவர், பிரிதலின்றி வானவர் அறிவுக்கு எட்டா பொருவுஇலா நித்தசுத்த பொருளினை அடைவர் - தன்னைவிட்டுப் பிரியாததாயும், தேவர்கள் அறிவிற்கும் எட்டாததாயும், ஒப்பில்லாததாயும், நித்தமாயும், சுத்தமாயுமுள்ள அச் சிவப்பொருள் விளங்கித்தோன்றப் பெறுவர் எ - று.

(போ - ரை.) சார்ந்த பொருளினிடத்துப் பற்றுவைத்துக் குரங்கு போல்மனம் ஒன்றைவிட்டொன்றைப் பற்றிஅலைந்துதிரியும். அந்த மனத்தைப் பொருள்களினிடத்துச் செல்லவொட்டாது தடுத்து, சிவபரம்பொருளைப் பற்றி நிற்பராயின், அங்ஙனம் நிற்பவர், தன்னைவிட்டுப் பிரியாததாயும் தேவர்கள் அறிவிற்கும் எட்டாததாயும் ஒப்பில்லாததாயும் நித்தமாயும் சுத்தமாயுமுள்ள அச் சிவப்பொருள்விளங்கித் தோன்றப் பெறுவர். எ - று.

(க - ரை.) உலகப்பொருளைப் பற்றவொட்டாது மனத்தைத்தடுத்து சிவப்பொருளைப் பற்றிநிற்பவர் சிவம் விளங்கித் தோன்றப்பெறுவர் என்பதாம்.



குரங்கு, தான் உண்ணுதற்குரியகனி ஒரு மரத்தில் ஒரு கிளையில் நிரம்ப இருப்பினும், அமைந்து உண்ணாது கிளைகள் தோறும் மரங்கள் தோறும் தாவித்திரியும். ஆதலின் ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றிச் சுழன்றுதிரியும் மனத்திற்கு அது உவமையாயிற்று.

அகரச்சுட்டால், சரித்துத்திரியும் என்னும் வினைக்கு வினைமுதலாகிய சித்தம்வருவிக்கப்பட்டது. தன் இடைச்சொல்.

திருத்துதல் - தடுத்தல்.

சூனியத்தே நின்றால் பொருளினையடைவர் என்றதனால், சூனியம் பாழன்றுசிவப்பொருளென்பது வலியுறுத்தப்பட்டது. பொருளென்றவிடத்து அகரச் சுட்டுவருவித்துரைக்க. பிரிதலில்லாதபொருள், விளங்கித்தோன்றுதலை அடைவரென்றது உபசாரம்.

வானவர் அறிவுக்கு என்றவிடத்து சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. அன்றே - அசை. (௨௧)

(அ - கை.) தேகப்பற்றைவிட்டவர் நீங்காத சிவானந்தத்தை யடைவரெனக்கூறுகின்றார்.

22. மேலாய வின்பமாகி விண்போ லுட் புறம்பதாகிக்
காலாதி தத்துவங்கள் கலவாது காயமின்றி
மாலாய கரணமின்றி யறிவாகி யெங்குங் காணும்
சீலாய ஞானஞ் சேர்ந்தோர் திரியாவா நந்தியாவர்.

(இ - ள்.) காலாதி தத்துவங்கள் கலவாது - காலம்முதலிய வித்தியா தத்துவங்களைக்கூடாது, மால் ஆயகரணம் இன்றி - மயக்கத்தைச்செய்வனவாகிய ஆன்மதத்துவங்களையுங் கூடாது, காயம் இன்றி - தூலசரீரப்பற்றை விட்டு, அறிவாகி - அறிவுவடிவாகி, எங்கும் காணும் சீலாயஞானம் சேர்ந்தோர் - எவ்விடத்துள்ள எத்திறப் பொருளையுங்காணவல்ல சிறப்புவாய்ந்த சிவஞானத்தையடைந்தவர், மேல் ஆய இன்பம் ஆகி - பேரின்பவடிவமான சிவமாகி, விண்போல் உள்புறம்பது ஆகி - ஆகாயத்தைப்போல் காணப்படும் பொருள்களின் உள்ளும் புறம்பும் நிறைந்து, திரியா ஆநந்தி ஆவர் - மாறுதலடையாத இன்பத்தை உடையவராவர் எ - று.

(போ - ரை.) காலம் முதலிய வித்தியாதத்துவங்களைக் கூடாது மயக்கத்தைச் செய்வனவாகிய ஆன்மதத்துவங்களையுங் கூடாது, தூலசரீரப் பற்றைவிட்டு, அறிவுவடிவாகி, எவ்விடத்துள்ள எத்திறப் பொருளையுங் காணவல்ல சிறப்புவாய்ந்த சிவஞானத்தையடைந்தவர் பேரின்ப வடிவமான சிவமாகி, ஆகாயத்தைப்போல் காணப்படும் பொருள்களின் உள்ளும் புறம்பும் நிறைந்து, மாறுதலடையாத இன்பத்தை உடையவராவர் எ - று.

(க - ரை.) தூலசூக்கும சரீரப்பற்றை விட்டுச் சிவஞானத்தை யடைந்தவர் சிவானந்தத்தை அநுபவிப்பர் என்பதாம்.

மேலைச் செய்யுளில் போகப் பற்றுக்குக் காரணம் சித்தசலன மெனக் கூறி, சித்தசலனம் ஒழிதற்குத்தேகப்பற்று நீங்கவேண்டுமென இச்செய்யுளாற்கூறியவாறும். புறம்பது என்றவிடத்து அதுபகுதிப்பொருள் விகுதி.

வித்தியாதத்துவம் - காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயைஎன்பன. மாயையென்பது தத்துவத் தோற்றத்திற்குக் காரணமாய்க் கலக்குண்டபாகம்.

ஆன்மதத்துவம் - மூலப்பிரகிருதி, புத்தி, அகங்காரம், மனம், என்னும் நான்கும், மெய் வாய் கண் மூக்கு செவி யென்னும் ஞானேந்திரியம் ஐந்தும், வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம் என்னும் கன்மேந்திரியம் ஐந்தும், சத்தம் பரிசம் ரூபம் இரதம் கந்தம் என்னும் தன்மாத்திரை ஐந்தும், பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் பூதம் ஐந்தும் ஆக இருபத்துநான்கு. சித்தம், மனத்தின் வியாபாரபேதமேயன்றித் தனித்தத்துவமன்று. இந்தத்தத்துவங்களின் தோற்றம் செயல் முதலியன சிவஞான சித்தியார் இரண்டாஞ் சூத்திரத்துள்விரிவாய்க் கூறப்பட்டிருத்தலின் அவ்விடத்துக் காண்க.

காயம் - தூலசரீரம். அது ஆகுபெயர்ப்பொருளால் தூலசரீரப் பற்றைக்குறித்தது.

சீலம் ஆய என்பது அம்கெட்டு சீலாய எனநின்றது. * ஞானுல் என்பதுபோல. (உஉ)

(அ - கை.) சித்தசலனம் ஒழிதற்குத் தேகப்பற்று போகப்பற்று என்னும் இருவகைப் பற்றும் நீங்கவேண்டுமென்பதைத் திருட்டாந்த முகத்தாற் கூறுகின்றார்.

23. மூண்டு பற்றி முழங்கி யெழுங்கனல்
ஈண்டு காட்ட மிலதே லிலதாகும்
தீண்டு மப்பொரு ளின்றெனிற் சித்தமும்
மாண்டு தோற்ற மிலதாய் மடிந்திறும்.

(இ - ள்.) பற்றி மூண்டு முழங்கி யெழும் கனல் - (விறகைப்) பற்றி மூண்டு ஆரவாரித்து மேலோங்கும் அக்கினியானது, ஈண்டு காட்டம் இலதுவல் இலது ஆகும் - நெருங்கிய விறகு இல்லையாயின் இல்லையாகும். அதுபோல, தீண்டும் அப்பொருள் இன்று எனில் - பொருந்தப்படுவதாய் மேலே கூறப்பட்ட போகப்பொருள் தேகப்பொருள்இல்லையாயின், சித்தமும்

* சிவஞானசித்தியார், க - ம் சூ - ம். செ, சுஉ.



மாண்டு தோற்றம் இலது ஆய் மடிந்து இறும் - மனமும் மாட்சிமைப்பட்டு மீண்டு தோன்றாதவாறு இறக்கும் எ - று.

(பொ - ரை.) விறகைப் பற்றி மூண்டு ஆரவாரித்து மேலோங்கும் அக்கினியானது, நெருங்கிய விறகு இல்லையாயின் இல்லையாகும். அது போல, பொருந்தப்படுவதாய் மேலே கூறப்பட்ட போகப் பொருள் தேகப்பொருள் இல்லையாயின், மனமும் மாட்சிமைப்பட்டு மீண்டு தோன்றாதவாறு இறக்கும் எ - று.

(க - ரை.) விறகின் சம்பந்தமில்லாத அக்கினி கெடுமாறுபோல, பொருள்களின் சம்பந்தமில்லாத மனம்கெடும் என்பதாம்.

உவமான உவமேயங்களின் தர்மத்தை எடுத்துக்காட்டுதலின், இச்செய்யுள் எடுத்துக்காட்டுவமையணி.

ஈண்டு முதனிலைத் தொழிற்பெயர். ஈண்டுதல் - நெருங்குதல்.

பொருள் சாதியொருமை.

சித்தமும் என்றவிடத்து உம்மை இழிவு சிறப்பு.

மாண்டு - மாட்சிமைப்பட்டு. மாட்சியாவது குரங்குபோல் அலையாமை. மாண்டு என்பது மாட்சிமைப்பட்டு என்னும்பொருளைத் தருமென்பது, * மாண்டார் நீராடி என்பதனாலறிக.

மடிந்திறு மென்பது ஒருசொல். † பாழ்படுதல் என்புழிப்போல.

பொருளின்மையாவது, பற்றில்லாமையால் பற்றுக்கோடாகத் தோன்றாமை. (உங)

(அ - கை.) போகப்பற்றால் நிகழும் அவத்தைகளை யெடுத்துக்காட்டி அவற்றில் கட்டுப்படாதவரே முத்தரெனக் கூறுகின்றார்.

24. மோக மூர்ச்சிகை மாயை முதற்கன
வாய சாக்கிர மல்லாச் சுழுத்தியும்
ஏய வெண்ணு மவத்தைக ளியாவையும்
வீய நோற்பவர் வீடு விடாதவர்.

(இ - ள்.) மோகம் ஆய - போகங்களில் பற்றுவைத்தலால் உண்டாகின்ற, சாக்கிரம் - சாக்கிரமும், கனவு - சொப்பனமும், அல்லாசுழுத்தியும் - இவ்விரண்டுமல்லாத சுழுத்தியும், மூர்ச்சிகை - துரியமும், முதல்மாயை - துரியாதீதமும்என, ஏய எண்ணும் அவத்தைகள் யாவையும் - பொருந்துவதாய்க் கருதப்படும் அவத்தைகளனைத்தும், வீயநோற்பவர் வீடு விடாதவர் - நீங்கும்படி சிவனோடு கலந்து நிற்றலிற்பயிலுந் தவமுடையார் சீவன்முத்தராவர் எ - று.

* திருக்குறள். கூடாவொழுக்கம். செ. ௨
† ஷை விருந்தோம்பல். செ. ௩.

(போ - ரை.) போகங்களில் பற்றுவைத்தலால் உண்டாகின்ற, சாக்கிரமும் சொப்பனமும் இவ்விரண்டு மல்லாத சுழுத்தியும் துரியமும் துரியாதீதமும் எனப் பொருந்துவதாய்க் கருதப்படும் அவத்தைகளைத் தும் நீங்கும்படி, சிவனோடுகலந்து நிற்றலிற் பயிலுந்தவமுடையார் சீவன்முத்தராவர் எ - று.

(க - ரை.) சாக்கிரம் முதலிய அவத்தைகளில் நின்று நீங்கினவரே சீவன்முத்தரென்பதாம்.

செய்யுளாதலின், சாக்கிரம் முதலியவற்றை முறைபிறழவைத்தார்.

அவத்தை - நிலை.

கேவலம் சகலம் சுத்தமென்னும் மூன்றவத்தைகளினும், சாக்கிரம் முதலிய ஐந்தவத்தைகள் தனித் தனி நிகழும். கேவலம் முதலிய மூன்றும் காரணம் காரியமென தனித் தனி இருதிறப்படும். அவற்றுள்,

காரணகேவலம் - மலத்தோடு கூடிநிற்கும் அநாதிநிலை.

காரணசகலம் - மலநீக்கத்தின் பொருட்டு இறைவனாற்றரப்படும் தநுகரணமுதலியவற்றைப் பொருந்திப் பிறந்திறந் துழலுநிலை.

காரணசுத்தம் - மலம்அறவே நீங்கச் சிவனோடு பிரிப்பின்றி நிற்றலையறிந்து சிவமாய் நிற்குநிலை.

காரியகேவலம் - தொழிற்பாடின்றி நித்திரை செய்யும் நிலை.

காரியசகலம் - எல்லாக் கருவிகளோடுங் கூடித் தொழிற்படு நிலை.

காரியசுத்தம் - யோகசாதனஞ் செய்யு நிலை.

இவை ஒவ்வொன்றிலுந் தனித் தனி ஐந்தவத்தைகள் நிகழும் முறை பிறவும் சிவஞானபோதச் சிற்றுரைவிளக்கம் சிவஞானசித்தியார் சுபக்கம் நான்காஞ் சூத்திரங்களில் விரித்துக் கூறியிருக்கின்றுமாதலின் இவ்விடத்து விரித்திலம்.

மூர்ச்சிதை - மயங்கிப் பெருமூச்சுவிட்டு நிற்கும் நிலை. இதுகாரிய கேவலத்தும் சகலத்தும் நிகழும் துரியம்.

முதல்மாயை - கலாதிதத்துவங்களின் தோற்றத்திற்குக் காரணமான மாயையின் கலக்குண்ட பாகத்தோடுகூடி ஆநந்தமயகோசனாய் நிற்கும் துரியாதீத நிலை. இதுவும் காரிய கேவலசகலம் இரண்டிலும் நிகழும்.

வீய - நீங்க. * வீயாது பின்சென்றடும் என்றவிடத்து வீயாமை, நீங்காமை குறித்தவாறு காண்க.

வீடுவிடாதவர் - சீவன்முத்தர். (உச)

(அ - கை.) தூலசூக்கும சரீரங்களைத் தனக்கு வேறெனை அறிந்தவனுக்கு ஞானம் விளங்கித்தோன்றுமென்பதைக் கூறுகின்றார்.

---

* திருக்குறள் - [illegible]

186946
95021, N7 V24

# செய்தித்திரட்டு.

**மகாகும்பாபிஷேகங்கள்:**—சொக்கலிங்கபுரத்தில், தனவணிக நகரத்தார்கள் திருப்பணிசெய்து நிறைவேறியிருக்கிற சிவாலயத்திலும் ராயவரத்தில் தனவணிகநகரத்தார்கள் திருப்பணிசெய்து நிறைவேறியிருக்கிற முத்துமாரியம்மன் கோவிலிலும் தைமீ ௨௯௳ மகாகும்பாபிடேகங்கள் நடைபெறுமெனத் தெரிகின்றது.

**தேவகோட்டை:**—திருவாளர், பழ. செ. லெ. இலக்குமணச் செட்டியாரவர்கள் கார்த்திகை ௭௳ கைலாய நாதர்கழலடிசேர்ந்தனர் என்பதறிந்து அவர்களின் பிரிவுக்கு அனுதாபமுறுகின்றோம். அவர்களுக்கு வயது ௭௯. வயது முதிர்ச்சியும் அறிவு முதிர்ச்சியுமுடைய அவர்கள் பிரபல குடும்பத்தின் தலைவரும், சைவாசார சீலமுள்ளவர்களும், பல வழக்குகளைத் தீர்த்து நியாயம் வழங்கி நடுநிலைப்பெரியாரெனப் பாராட்டப் பெற்றவர்களும், உள்ளூரிலும் ஆண்டான்கோயில் என்னும் திருக்கடுவாய்க் கரைப்புத்தூரிலும் திருவிரும்பூளையிலும் சிவாலயத் திருப்பணிகள் சிறப்புறச் செய்வித்துப் பெரும்புகழும் பிறவிப் பெரும்பயனும் பெற்றவர்களுமாவர். அறிவொழுக்க மாட்சிமைகளால் சிறந்த சீரியராய்த்திகழ்ந்த சிவபுண்ணியசீலரின் புனித ஆன்மா ஆண்டவன் திருவடி நிழலிற்கலந்து என்றும் இனிதாய பேரின்பம் துய்ப்பதாகுக. அவர்களின்பிரிவு குறித்து எற்குள்ளபரிவை அவர்களின் கருத்திற்குப் பொருத்தமாயுள்ள சகோதரர் தனயர் ஆகிய உறவினர்க்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிராமணவாலிபர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டுவிழா கார்த்திகை ௨௭௳ மாலை அட்வகேட் திரு. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் தலைமையில் விரிவுரைகளுடன் நடைபெற்றது.

**புதுக்கோட்டை:**— சிறந்த தமிழ் அறிஞரும், சைவநூல்களிலும் ஆகமங்களிலும் மிகப் பயிற்சியுடையவரும், சைவசமயத்தில் ஆழ்ந்த பற்றுதலும், இறைவன்பால் இடையறாத பேரன்பு உடையவருமான சித்தக்ஷேத்ர சித்தபரமேஷ்டியான ஸ்ரீ இராமச்சந்திரய்யா அவர்கள் கார்த்திகை ௯௳ எல்லாம்வல்ல இறைவனின் திருவடி நீழலெய்தினர்.

அவர்களின் பிரிவாற்றாது கலியும் அன்னாரின், அன்பர்கட்கும், குடும்பத்தார்க்கும் எங்கள் அனுதாபத்தைத்தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அவர்களின் ஞாபகார்த்தமாகவும், இவ்வூரில் வாசகசாலையில்லாக் குறைதீரவும் ஸ்ரீ சௌந்தரேஸ்வரஸ்வாமியின் திருவருளை முன்னிட்டு ஸ்ரீ இராமச்சந்திர ஞாபகார்த்த வாசகசாலை நிறுவியுள்ளோம். அன்பர்கள் ஆதரிக்கவும், இவ்வாசகசாலை என்றும் நின்று நிலவ பெருங்கருணைத் தடங்கடலாயெம்பிரான் தண்ணருள்பாலிக்கவும்வேண்டும். எனவே வாசகசாலையார் அறிவிக்கின்றனர்.

**திருச்செங்கோடு:**—வேலவருக்கு ஐப்பசி ௨௨௳ திருவிழாத்தொடங்கி ௨௭௳ கந்தர்சஷ்டி யன்று சூரசம்மாரமும் ௨௮௳ திருக்கல்யாணமும் கொண்டாடப்பெற்றன. கார்த்திகைமாதமுழுதும் திருக்கோயில், திருச்சன்னிதானம், பிரகாரம், திருமதில், திருக்கோபுரங்களில் திருவிளக்கு ஏற்றி அலங்கரிக்கப் பெற்றன. அர்த்தநாரீஸ்வரருக்கு நான்கு சோமவாரங்களிலும் திருமஞ்சன திருவாராதனைகள் சிறப்பாகச்செய்து அன்னதானங்களும் புரிந்து அன்பர்கள் குதூகலமாகப் போற்றினர். ௯௳ அர்த்தநாரீசுவரருக்கு அபிடேகமும், தங்கக்கவச[illegible]ங்களும், வெள்ளிவிமானரோகணமும், திருக்கோயில் திருப்பவனியும் செய்து [illegible]மும் [illegible] பெற்றன.

## சிவநேசன்.

**பாராட்டுக்கூட்டம்:**—காரைக்குடி நகரபரிபாலன சபைத்தலைவர், திருவாளர், மெ. செ. மெ. மெ. மெய்யப்பசெட்டியாரவர்கட்கு தேவகோட்டை நகரத்தார்களால் ராமநகர் 'லெட்சுமவிலாஸ்' பங்களாவில் தேவகோட்டை சப்கலெக்டர் மகா-ா-ஸ்ரீ டி. எஸ். ஸ்வாமிநாதன். எம். ஏ. ஐ. ஜி. எஸ். அவர்கள் தலைமையில் கார்த்திகை ௨௰யிலும், காரைக்குடி நகரத்தார்களால் எஸ். எம். எஸ். ஹைஸ்கூலில் கனம் செட்டிநாட்டு ராஜா, சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் தலைமையில் கார்த்திகை ௨௪வயிலும், பள்ளத்தூர் நகரத்தார்களால், அரு. கா. வகையாரின் படைப்புவீட்டில் சிவகெங்கை சமஸ்தானம் திவான் ஆர். எம். சுந்தரம் ஐ. ஜி. எஸ். அவர்கள் தலைமையில் கார்த்திகை ௩௰வயிலும் கூடிப்பாராட்டியதுடன் சிற்றுண்டி விருந்துகளும் செய்யப்பெற்றன. பல பிரமுகர்கள் ஆங்காங்கு வந்துகலந்து கொண்டனர்.

**பரிசளிப்பு:**—திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து ஆயிரரூபாய்த் தமிழ்ப்பரிசு (ஆறும்வருடக் கொண்டாட்டம்) சென்னை சர்வகலா சங்கத்தாரால் நடத்தப்பெறும் தனித்தமிழ் வித்துவான் பரீக்ஷையில். 1934 ம் வருடத்தில் முதன்மையாகத் தேறிய திருப்பூர் முனிசிபல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் வித்துவான், திரு. ஏ. எஸ். நாராயணசாமி நாயுடு அவர்கட்கு கோயம்புத்தூர் ஒய். எம். ஜி. ஏ. ஹாலில் 1934 டிசம்பர் 8௳ மாலை கோயம்புத்தூர் அட்வோகேட் மகா-ா-ா-ஸ்ரீ ராவ்பஹதூர் டி. ஏ. இராமலிங்க செட்டியாரவர்கள், பி. ஏ. பி. எல். எம். எல். ஜி. தலைமையில் வழங்கப்பெற்றது.

**மகாசமாஜம்:**—சைவசித்தாந்த மகாசமாஜத்தின் ௨௩-ம் ஆண்டு நிறைவு விழாவும், சைவர் மகாநாடும், சைவமங்கையர் மகாநாடும், இளைஞர் மகாநாடும் திருவதிகைவீரட்டானத்தில் இம்மதி ௮௨ முதல் மூன்றுநாட்கள்வரை முற்பகல் பிற்பகல்களில் நடைபெறும்.

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தலைவர், உயர்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் இவ்விழாவையும், மகாநாடுகளையும் 'திண்ணமாகத் திறந்தருள்செய்து' உடனிருந்து நடத்திவைக்க அன்புகூர்ந்து இசைந்துள்ளார்கள்.

**நவசக்தி ஆசிரியர்:**—திருவாளர், திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் தலைமையில் சமாஜவிழாவும், சைவர் மகாநாடும், சென்னை பல்கலைக் கழகத்தில் வித்வான் பட்டம் பெற்று தமிழ்ஆராய்ச்சிப்பணிபுரியும் திருநிறை செல்வி, தானு அம்மாள் தலைமையில், சைவ மங்கையர் மகாநாடும், சென்னை ஆவணப்பதிவு கூட்டுத்தலைவர், திருவாளர் ஸீ. இராமலிங்கமுதலியார் பி. ஏ. அவர்கள் தலைமையில் சைவஇளைஞர் மகாநாடும் தக்கபேரறிஞர்களின் அரிய பெரிய விரிவுரைகளுடன் திருவருளால் இனிது நடைபெறும்.

### "சிவநேசன்" ஆண்டுத்தொகை விவரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ 2—4—0 | அதற்கு மூலதனம் | ரூ 30—0—0 |
| அயல்நாட்டிற்கு | ரூ 3—0—0 | அதற்கு மூலதனம் | ரூ 40—0—0 |

தனிப்பிரதி அணா 0—3—0

### விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4—0—0

நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8—0—0

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர்
ராம. சு.ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.